பட்டுச் சாறிகள்
பட்டுவேட்டிகள் மற்றும்
சிறுவர்களுக்கும்
பெரியவர்களுக்கும் புதிய
டிசைன் புடைவைகளை
தெரிவு செய்ய
★ இன்றே நாடுங்கள் ★
மதுரா
பட்டு மகால்
75, பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
5-00

மனமிசைந்து ஏவி
மங்கையர் நாடும் ஒரே
★ புடைவை ஸ்தாபனம் ★
மதுரா
பட்டு மகால்
75, பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2025 மார்கழி 28 வியாழக்கிழமை (12 – 01 – 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 47

# அரசியல் தீர்வுக்கான பேச்சு திகதி
# சனி நடக்கும் சந்திப்பில் முடிவு!

## அமைச்சர் அனுருத்த அறிவிப்பு

கொழும்பு, ஜனவரி 12

ஸ்ரீலங்கா அரசு — விடுதலைப் புலிகள் பிரதிநிதிகள் இடையே நாளை மறுதினம் சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெறும் மூன்றாம் கட்டப் பேச்சுக்களின் போது—

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கான பேச்சுக்களை நடத்துவதற்கான திகதி குறித்து முடிவு செய்யப்படும்.

—இவ்வாறு தாங்கள் நம்புவதாக ஸ்ரீலங்கா நீர்ப்பாசன மின்சக்தி அமைச்சரும், பிரதி பாதுகாப்பு அமைச்சருமான கேணல் அனுருத்த ரத்வத்தை நேற்று தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை வெளியிடுவதற்காக நேற்று கொழும்பில் கூட்டப்பட்ட வாராந்த செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இத்த கவலைத் தெரிவித்தார்.

இனப்பிரச்சினைத் தீர்வு குறித்து ஆராய்வதற்கான திகதி ஒன்றை குறித்துக் கொள்ளும்படி சனியன்று நடக்கும் பேச்சுக்களில் அரசுத் தரப்பினர் புலிகளிடம் கேட்டுக் கொள்வர் என்றார் அனுருத்த.

நாளை மறுதினம் நடைபெறும் பேச்சுக்களில் —

யாழ் குடாநாட்டின் புனரமைப்புக்கான பொருளாதார உதவிகள் குறித்தும் விரிவாக ஆராயப்படும் என்றார் அவர். (உ–க–3–6)

## நோர்வே பிரதிநிதிகள் நேற்று கொழும்பு வருகை

கொழும்பு, ஜன. 12

விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையிலான போர் இடை நிறுத்தத்தைக் கண்காணிக்கும் குழுக்களின் தலைமைப் பொறுப்பை ஏற்கவிருக்கும் நோர்வே நாட்டுப் பிரதிநிதிகள் இருவர் நேற்றுக் காலை கொழும்பு வந்து சேர்ந்தனர்.

கனடாவைச் சேர்ந்த இரு பிரதிநிதிகள் நாளை வரவுள்ளனர்.

நெதர்லாந்து நாட்டு பிரதிநிதிகளும் விரைவில் கொழும்பு வருவர் என எதிர்பார்க்கப்படுகின்றது. (உ–க–3)

### கண்காணிப்புக் குழுக்களின்
## தலைமைப் பிரதிநிதிகள் சந்திரிகாவை சந்திப்பர்

கொழும்பு, ஜன. 12

போர் இடைநிறுத்த கண்காணிப்புக் குழுக்களின் தலைமைப் பொறுப்பை ஏற்கவிருக்கும் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் இன்று ஜனாதிபதி சந்திரிகாவை சந்திப்பர் என ஜனாதிபதி செயலகப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

போர் இடை நிறுத்த ஏற்பாடுகள் குறித்து அவர்களுக்கு பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்தரத்வத்தை விளக்கமளிப்பார் என்றும் தெரிவிக்கப்பட்டது. [உ–க–3]

### தாக்குதல் தவிர்ப்பு வலயங்களுக்குள்
## இருதரப்பும் நடமாட்டம் குறித்து தகவல் பரிமாற்றம்

கொழும்பு, ஜன. 12

அரச படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பரஸ்பர தொடர்புகள் பலமடைந்து வருவதாக அரச சார்பு பத்திரிகை ஒன்று நேற்று செய்தி வெளியிட்டுள்ளது.

தாக்குதல் தவிர்ப்பு வலயங்களுக்குள் தமது நடமாட்டங்கள் குறித்து இருதரப்பினரும் தகவல்களைப் பரிமாறிக் கொள்கிறார்கள் என்றும்—

அந்த வலயத்துக்குள் அத்துமீறல்கள் இடம் பெறாதிருப்பதை உறுதி செய்வதாக இந்த தொடர்புகள் இருப்பதாகவும்— தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-3)

### திருமலை, மட்டு, -அம்பாறையில்
## கண்காணிப்புக் குழுக்கள் இன்று முதல் இயங்கும்

கொழும்பு, ஜன. 12

திருகோணமலை, மட்டக்களப்பு — அம்பாறை மாவட்டங்களில் கண்காணிப்புக் குழுக்கள் இன்று முதல் செயற்படத் தொடங்கும் என பிரதி பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்தரத்வத்தை நேற்று செய்தியாளர்கள் மாநாட்டில் தெரிவித்தார்.

வடக்குக் கிழக்குப் பகுதிகளில் உள்ள விடுதலைப் புலிகளின் பிரதேசத் தலைவர்களுக்கும் இராணுவத்துக்கும் இடையில் வானொலித் தொடர்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருப்பதால், தோன்றக்கூடிய எத்தகைய நிலைமை குறித்தும் உடனடியாக விவரங்களைப் பரிமாறும் வசதி கிடைத்திருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

நேற்று முன்தினம் நிகழ்ந்ததாகக் கூறப்படும் மணலாற்றுச் சம்பவம் குறித்து அவர் விளக்கம் அளித்தார்.

சில செய்தியாளர்கள் இச்சம்பவத்தை மிகைப்படுத்திக் காட்டுவதற்கு முயற்சித்துள்ளனர். ஆயினும் அது பாரிய சம்பவம் அல்ல என அவர் குறிப்பிட்டார். (உ–க–3–6)

## புலிகள் - இராணுவத் தரப்பு திருமலையில் சந்திப்பு

கொழும்பு, ஜன. 12

போர் இடைநிறுத்தம் நடைமுறைக்கு வந்ததை அடுத்து—

திருகோணமலையில் இராணுவ அதிகாரிகளும் விடுதலைப் புலிகளின் தலைவர்களும் நேற்று சந்திக்கவிருந்ததாக செய்தி ஏஜென்ஸிகள் தகவல் வெளியிட்டன.

இராணுவத் தரப்பில் மேஜர் ஜெனரல் சத்தீஸ் ஜெயசுந்தர இந்தச் சந்திப்பில் பங்குபற்ற விருந்தார்.

இச்சந்திப்பில் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு அதிகாரிகளும் பங்குபற்ற விருந்தனர் என இராணுவத் தரப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

முன்னதாக மட்டக்களப்பு மாவட்ட பிரிகேடியர் எச். எஸ். ஹப்பு ஆராய்ச்சியும் விடுதலைப் புலிகளும் முதன் முறையாகச் சந்தித்துப் பேசியதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ–3)

### தமிழக காங்கிரஸ் தலைவர் பதவி:
## வாழப்பாடிக்கு கல்தா! குமரிஅனந்தன் நியமனம்

புதுடில்லி, ஜன. 12

இந்திய காங்கிரஸ் கட்சியின் தமிழ்நாடு தலைவர் பதவியிலிருந்து வாழப்பாடி ராமமூர்த்தியை கட்சித் தலைவரும், இந்தியப் பிரதமருமான நரசிம்மராவ் விலக்கினார்.

புதிய தலைவராக குமரி அனந்தனை அவர் நியமித்தார்.

சர்ச்சைக்குரிய அரசியல் பிரமுகரான குமரி அனந்தன் காங்கிரஸ் தலைவராக இந்திராகாந்தி இருந்தகாலத்தில் காங்கிரசை விட்டு விலகி காமராஜ் காங்கிரஸ் என்ற



வாழப்பாடி

தனிக்கட்சியை ஆரம்பித்தவர். பின்னர் அதைக் கலைத்துவிட்டு காங்கிரஸில் (6ஆம் பக்கம் பார்க்க)

# சரியான சமாதானப் பேச்சுகள் ஆரம்பித்த பின்னரே அபிவிருத்தி!

## அமைச்சர்களுக்கு சந்திரிகா தகவல்

கொழும்பு, ஜன. 12

வடக்கில் புனர் நிர்மாண வேலைகளை செய்து அதனை அபிவிருத்தி செய்வதற்கு ஒதுக்கப்படவுள்ள 4,000 கோடி ரூபா திறைசேரிப் பணத்திலிருந்து எடுக்கப்பட மாட்டாது.

அத்தோடு, இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கான சரியான சமாதானப் பேச்சு ஆரம்பிக்கும் வரை அபிவிருத்திக்கு உரிய நிதி வழங்கப்படவும் மாட்டாது.

இத்தகவலை கடந்த நான்காம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போது ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தமது அமைச்சர்களிடம் கூறியதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

இதேவேளை, இம்மாதம் 5ஆம் திகதி, வடக்கு-கிழக்கு போர் முனைகளில் பணி புரியும் இராணுவ இணைப்பு அதிகாரிகளின் மாநாடு ஒன்றை பிரதி பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்த கூட்டியிருந்தார்.

சமாதான முயற்சி தொடர்பாக அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளை விளக்குவதற் [ 6ஆம் பக்கம் பார்க்க]

## சார்க் மாநாட்டுக்கு சந்திரிகா

கொழும்பு, ஜன. 12

எதிர்வரும் ஏப்ரல் மாதம் புதுடில்லியில் நடைபெறும் சார்க் அமைப்புகளின் மாநாட்டில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பங்குபற்றுவார் என்று அவருடன் நெருங்கிய வட்டாரங்களை மேற்கோள் காட்டி 'ஐலண்ட்' செய்தி வெளியிட்டுள்ளது.

## செய்தியாளர் குழு நாளை வருகிறது

நாளை மறுதினம் யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் 3ஆம் கட்டப் பேச்சுக்கள் தொடர்பான செய்திகளை சேகரிக்க உள்நாட்டு, வெளிநாட்டு செய்தியாளர்கள் அடங்கிய 37 பேர் கொண்ட செய்தியாளர்கள் குழு நாளை காலை யாழ்ப்பாணம் வரவிருக்கின்றது.

நாளை விசேட விமான மூலம் பலாலி வந்து சேரும் அவர்கள் காங்கேசன்துறையில் இருந்து கப்பல் மூலம் பருத்தித்துறைக்கு வந்து சேர்வர். (இ–3)

# வடக்கு - கிழக்கு புனரமைப்புக்கு உதவ மேற்கு நாடுகள் இணக்கம்

## ஆனால் தீர்வு காணப்பட வேண்டும் என நிபந்தனை

கொழும்பு, ஜன. 12

போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்குப் பகுதிகளில் அரசு மேற்கொள்ளவிருக்கும் உத்தேச புனர்வாழ்வு, புனரமைப்பு திட்டங்களுக்கு உதவ வட அமெரிக்கா, பிரிட்டன், ஜேர்மனி, பிரான்ஸ், நோர்வே, இத்தாலி, சுவீடன் ஆகியவை இணங்கியிருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

இந்த விடயத்தில் அரசுக்கு உதவ இணக்கம் தெரிவித்துள்ள போதிலும்—

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சிறந்த புரிந்துணர்வு நிலவி, இறுதித் தீர்வு கிட்டுவதற்கான வாய்ப்புகள் புலனாகினால் மட்டுமே நிதியை தாங்கள் வழங்கமுடியும் என மேற்படி உதவும் நாடுகள் நிபந்தனை விதித்திருப்பதாக அரசு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அரசு — புலிகள் இரண்டாம் கட்டப்பேச்சு நடைபெறுவதற்கு முன்னர் கொழும்பில் உள்ள சில வெளிநாட்டு இராஜதந்திரிகளை ஜனாதிபதி சந்திரிகா சந்தித்துப் பேசினார் என்றும் —

வடக்கு, கிழக்கை புனரமைக்க அரசு திட்டமிட்டிருப்பது குறித்தும், அதற்குத் தேவைப்படும் நிதி விவரம் பற்றியும் ஜனாதிபதி அப்போது அவர்களுக்கு விளக்கமளித்தார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

சம்பந்தப்பட்ட இராஜதந்திரிகள் இது குறித்து தத்தமது அரசுகளுடன் தொடர்பு கொண்டனர் என்றும்—

அந்த அரசுகள் இந்த விடயத்தில் உதவத் தயாராக இருப்பதாக அவர்களுக்கு பதிலளித்திருப்பதாகவும் மேலும் கூறப்படுகின்றது.

சம்பந்தப்பட்ட நாடுகள் வழங்கும் உதவிகள் சில, பத்தாண்டு திட்டங்களாகக் கூட இருக்கும் என்றும்—

இவற்றுக்கு நிதி தவணை முறையில் வழங்கப்படும் என்றும் அதிகாரிகள் கூறினர். (6ஆம் பக்கம் பார்க்க)

## வேலை நிறுத்தங்கள் தொடர்கின்றன

கொழும்பு ஜன. 12

நாட்டில் 21 நிறுவனங்களில் இன்னும் வேலை நிறுத்தம் தொடர்கின்றது.

தொழில் ஆணையாளர் ஆர்.பி விமலசேகர இத் தகவலை வெளியிட்டார்.

நவம்பர், டிசம்பர் மாதங்களில் 70 வேலை நிறுத்தங்கள் பேச்சுக்கள் மூலம் தீர்க்கப்பட்டதாக அவர் சொன்னார். (உ)

## ஸ்ரீலங்கா கடற்படை சூடு! 6 தமிழக மீனவர்கள் பலி!!

லண்டன், ஜன. 12

கச்சதீவுக்கு அருகே ஸ்ரீலங்கா கடற்படை கடந்த வியாழன்று நடத்திய தாக்குதலில் ஆறு இந்திய மீனவர்கள் உயிரிழந்தனர். அவர்களின் படகு கடலில் மூழ்கியது

செய்தி ஏஜென்ஸிகள் இத்தகவலை வெளியிட்டன.

பாம்பன் ராஜராஜபுரத்தைச் சேர்ந்த மீனவர்களே உயிரிழந்தனர்.

உயிரிழந்த மீனவர்களில் இருவரின் சடலங்கள் நேற்று முன்தினம் கரை ஒதுங்கியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

(முன்னர் வந்தசெய்தி 3ஆம் பக்கத்தில்) (உ–க)

# ராஜீவ் கொலை வழக்கில் தேடப்பட்ட நால்வர் இந்திய அரசிடம் ஒப்படைப்பு

## சண்டே லீடர் தகவல்

கொழும்பு, ஜன. 12

ஸ்ரீலங்கா அரசு தான் கைது செய்த விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் நால்வரை —

ராஜீவ் கொலை வழக்கு விசாரணைக்காக இந்தியாவிடம் ஒப்படைத்துள்ளது.

சிரேஷ்ட பாதுகாப்பு அதிகாரி ஒருவரை மேற்கோள் காட்டி "த சண்டே லீடர்" பத்திரிகை இச்செய்தியை வெளியிட்டுள்ளது.

ஸ்ரீலங்கா ஒப்படைத்த நான்கு ஈழத் தமிழர்களில் மூவர் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் என்றும் —

நான்காவது நபர் விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர்களுடன் நெருங்கிய தொடர்புகளை வைத்திருந்தவர் என்றும் கூறப்படுகின்றது.—

ராஜீவ்காந்தி கொலை குறித்து விசாரிக்கும் இந்திய அமைப்புக்களுக்கும் இந்திய அரசுக்கும் ஸ்ரீலங்கா தீவிர ஒத்துழைப்பு நல்கிவருகின்றது —

—இவ்வாறு அந்த அதிகாரி மேலும் தெரிவித்ததாக "சண்டே லீடர்" செய்தி குறிப்பிட்டது.

ராஜீவ் கொலை தொடர்பான விசாரணைக்குத் தேவைப்பட்டோ[illegible] ளித்ததோடு —

அதுபற்றிய விசாரணைகளை நடத்தும் இந்திய விசேட புலனாய்வு அணிக்கு உதவுவதற்காக ஸ்ரீலங்கா பொலீஸ் அணிகளையும் சிரேஷ்ட புலனாய்வு அதிகாரிகளையும் இந்தியாவுக்கு ஸ்ரீலங்கா அனுப்பி வைத்துள்ளது.

இந்திய அதிகாரிகளுக்கு இந்த விடயத்தில் இலங்கை முழு ஒத்துழைப்பு வழங்குவதை வெளிவிவகார அமைச்[illegible] அதிகாரி ஒருவ[illegible] (6ஆம் பக்கம் பார்க்க)

# ராணுவம் பற்றிய ரகசிய அறிக்கை: உயரதிகாரிகள் மத்தியில் சீற்றம்!

கொழும்பு, ஜன. 12

கடந்த வாரம் ஸ்ரீலங்கா இராணுவம் குறித்து அமைச்சர்கள், அரசியல்வாதிகள், பாதுகாப்பு அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள் ஆகியோருக்கு அனுப்பப்பட்டதாகக் கூறப்படும் — 19 பக்க இரகசிய அறிக்கை — ஒன்று இராணுவ உயர் பீடத்தில் பெரும் அதிருப்தியையும், கோபத்தையும் உருவாக்கியிருப்பதாகக் கூறப்படுகின்றது.

இராணுவத் தளபதி தொடக்கம் அவருக்குக் கீழ் சங்கிலிக் கோவைபோல் இருக்கும் 75 இற்கும் அதிகமான படை அதிகாரிகள் வரை இந்த அறிக்கையால் சீற்றமடைந்திருக்கின்றனர்

"ஸ்ரீலங்கா இராணுவ நிரந்தரப் படை —சிரேஸ்ட அதிகாரிகளின் சேவை மூப்பும், தனித்தனி மதிப்பீடும்" என்ற தலைப்பிலான இந்த அறிக்கையே அரச உயர்மட்டங்க ( 6ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். மாவட்ட
கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி

கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திர
உயர்பிரிவு பயிற்சி நெறி

## விண்ணப்பம்கோரல்

1995 மாசி மாதம் ஆரம்பமாக இருக்கும் மேற்படி பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவங்களை 10/- செலுத்தி கல்லூரியில் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு திகதி: **25 — 01 — 1995**

— அதிபர்.

இல 14, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம். [சி–154]



## யப்பானிய மொழிப் புலமைக் கற்கைநெறி

யப்பானிய மொழிப் பயிற்சிபெற விரும்புபவர்கள், கீழே தரப்பட்டுள்ளதுபோன்ற ஒரு பதிவுப் படிவம் அமைத்து, அதனை நிரப்பி, 25 – 01 – 1995க்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கும்படி கேட்கப்படுகின்றனர்:

தலைவர்
சைவ வித்தியா விருத்திச் சங்கம்
கலாசாலை வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப்படுவோர் பதிவுக் கட்டணமாக ரூபா100/– வகுப்புக்கு வருகைதரும் முதல் நாளிலே செலுத்தவேண்டும். வகுப்புக்கள் யாழ்/தொழில்நுட்பக் கல்லூரியில் ஒவ்வொரு கிழமை நாளிலும் மாலை 4–15 தொடக்கம் 6–15 வரை நடைபெறும்.

இக்கற்கை நெறியிலே சேர விரும்புபவர் 17 வயதிற்கு மேற்பட்டவராகவும், க. பொ. த. (சா. த.) தேர்வில் தமிழ்மொழியில் தேர்ச்சி பெற்றவராகவும் இருத்தல் வேண்டும்.

### பதிவுப் படிவம்

1. முழுப்பெயர்:
2. முகவரி:
3. பிறந்த ஆண்டு, திங்கள், திகதி:
4. கல்வித்தகைமை:
5. தொழில் நிலை:
6. தேர்ச்சி பெற்ற வேறு மொழிகள்:
7. இறுதியாகப் பயின்ற பள்ளி:
8. கற்கைநெறியில் சேரும் நோக்கம்:
9. கலைத்திறமை (இருப்பின்):
10. எழுத்தாக்கங்கள் (இருப்பின்):
11. கையொப்பம்;
12. நாள், திங்கள், ஆண்டு:

பேராசிரியர் அ. சண்முகதாஸ்
தலைவர்,
சைவ வித்தியா விருத்திச்சங்கம்

சோ. பத்மநாதன்
செயலாளர்,
சைவ வித்தியா விருத்திச் சங்கம்

(சி155)



## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர் கே.வி. தெய்வேந்திரம்

தோற்றம்: 22—03—1913
மறைவு: 13—12—1994

எனது சிறிய தகப்பனார் அமரர் கே. வி. தெய்வேந்திரம் (முன்னாள் யாழ். உதவி மேயர்) அவர்களின் மரணச் சடங்கில் கலந்து கொண்டோர்க்கும், அநுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும், வில்லூன்றித் தீர்த்த மண்டபத்தில் இடம்பெற்ற அந்தியேட்டி வைபவத்தில் கலந்து கொண்டோர்க்கும் நன்றி.

கொட்டடி கே. வி. ஜெயலிங்கநாதன்
(பேறாமகன்)

(34668)


# பாடசாலைக் கட்டடம் சரிந்து மாணவர்கள் காயம்

## பண்டிதர் குடியிருப்பில் சம்பவம்

பாடசாலை ஒன்றின் வகுப்பறைக் கட்டடம் சரிந்து வீழ்ந்ததால்' அங்கு படித்துக் கொண்டிருந்த மாணவர்களில் பதினைந்துக்கும் மேற்பட்டோர் காயமுற்றனர்.

கிளாலி, பண்டிதர் குடியிருப்பில் உள்ள கமலாசனி பாடசாலையிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

நேற்று முன்தினம் நடைபெற்ற இச்சம்பவத்தில் காயமுற்றவர்களில் ஒன்பது மாணவர்கள் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஏனையோர் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றனர்'

முப்பதுக்கும் மேற்பட்ட மாணவர்கள் இவ் வகுப்பறையில் படித்துக் கொண்டிருந்ததாகவும் திடீரென கட்டிடம் சரிந்தபோது சிலமாணவர்கள் மேசைகளின் கீழ் மறைந்து கொண்டதால் காயமின்றித் தப்பியதாகவும் தெரியவாருகிறது.

கட்டடத்தின் கூரைத்தகடுகளும், வகுப்புறையிலிருந்த தளபாடங்களும் பலத்த சேதமடைந்தன

(அ–117)

# அதிகரிக்கப்பட்ட இம்மாத ஓய்வூதியம் தாமதமாகும்

யாழ்ப்பாணம், ஜன. 12

யாழ். மாவட்ட ஓய்வூதியர்களின் ஜனவரி மாத ஓய்வூதியம் மாத இறுதியிலேயே வழங்கப்படவிருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

ஓய்வூதியர்களுக்கு 16/94 (1)சுற்று நிருபத்தின்படி வழங்கப்பட வேண்டிய கொடுப்பனவு அதிகரிப்பு தொடர்பான வேலைகள் தற்சமயம் நடைபெற்று வருகின்றன.

அந்த வேலைகள் முடிந்து, கொடுப்பனவு அதிகரிப்பு விவரங்கள் நாளை கொழும்புக்கு செயலக அதிகாரி ஒருவரால் எடுத்துச் செல்லப்படும்.

கொழும்பில் அவை கணனி மூலம் திரட்டப்பட்டு வவுச்சர்கள் மாத இறுதிக்குள் எடுத்து வரப்படும் என்றும்—

அதன் பின்பே கொடுப்பனவுகள் வழங்கப்படும் என்றும்— செயலக ஓய்வூதியப் பிரிவு அதிகாரி தெரிவித்தார். அதிகரிக்கப்பட்ட ஓய்வூதியம் மே மாதத்தில் இருந்து அதிகரிக்கப்படும். (இ–3)

# சிறிமாவோவின் சிபார்சை நிராகரித்த அமைச்சரவை

கொழும்பு, ஜன. 12

நாடாளுமன்றத்தில் உள்ள அரசாங்கத்தின் அலுவலகம் ஒன்றுக்கு அதிகாரி ஒருவரை நியமிப்பதற்கு பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா செய்த சிபார்சை ஏற்க அமைச்சரவை மறுத்து விட்டதாம்.

புதிய அரசின் அமைச்சர் என்ற முறையில் அமைச்சரவைக்கு தாம் சமர்ப்பித்த முதலாவது அமைச்சரவை ஆவணம் நிராகரிக்கப்பட்டது குறித்து பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா ஏமாற்றம் அடைந்திருப்பதாகக் கூறப்படுகின்றது.

ஆனால் —

''ஆவணம் நிராகரிக்கப்பட்டமை தனிப்பட சிறிமாவோவுக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கை அல்ல; சிபார்சு செய்யப்பட்ட அதிகாரிக்கு எதிராக இரு அமைச்சர்கள் இருந்ததே காரணம்''— என சிறிமாவோவைச் சமாதானப் படுத்தினாராம் அரசின் மூத்த அமைச்சர்களில் ஒருவரான லக்ஷ்மன் ஜெயக்கொடி.

# பாப்பரசர் வரும் தினத்தில் 2,500 பஸ்கள் சேவையில்

கொழும்பு, ஜன. 12

எதிர்வரும் 20ஆம் திகதி கொழும்பு வரும் பரிசுத்த பாப்பரசரை தரிசிக்க வரும் மக்களின் நன்மை கருதி கொழும்புக்கும் நாட்டின் ஏனைய முக்கிய நகரங்களுக்கும் இடையே 2 ஆயிரத்து 500பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படும் என்று அரசு அறிவித்துள்ளது

[இ-3]

# வெளிவாரிக் கற்கை நெறி: விண்ணப்ப திகதி நீடிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 12

யாழ். பல்கலைக்கழக 1993 — 94 கல்வி ஆண்டுக்கான வெளிவாரிக் கற்கை நெறியில்சேர்வதற்கான விண்ணப்ப திகதி எதிர்வரும் திங்கட்கிழமை 16ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

1-1-94 ஆம் திகதிக்கு முன்னர் க. பொ. த உயர்தரப் பரீட்சையில் மூன்று பாடங்களுக்கு மேல் சித்தியடைந்தவர்கள் முதற்கலை, முதல் வர்த்தக கற்கை நெறிகளுக்குப் பதிவு செய்யலாம் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த கற்கை நெறிகளுக்கு விஞ்ஞானம் பயின்றவர்களும் விண்ணப்பிக்கலாம்.

இதேவேளை 1992 — 93 கல்வி ஆண்டில் நுண்கலை டிப்ளோமா தகைமை பெற்றவர்கள் பொதுக்கலை சிறப்புக்கலை (முதலாவது பகுதி) கற்கை நெறிக்குப் பதிவு செய்யலாம் என்று வெளிவாரிக் கற்கை நெறி இணைப்பாளரான கலைப்பீடாதிபதி பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்தார்.

(அ)

## ஆலயங்களில்

பாணன்குளம் நாச்சி அம்பாள் ஆலயத்தில் வைகுண்ட ஏகாதசி தினமான இன்று அதிகாலை விசேட அபிஷேக ஆராதனைகளும், சுவாமி வீதியுலாவும் இடம்பெறும்.

(ஐ)

★ ★ ★

வடமராட்சி, ஜன. 12

பொலிகண்டி அருள் மிகு கந்தவனம் சுப்பிரமணிய சுவாமி ஆலயத்தில் இன்று வியாழக்கிழமை வைகுண்ட ஏகாதசி அபிஷேகம் நடைபெறும். (ஐ-173)

## இன்று

அத்தியடி விரகத்தி விநாயகர் ஆலயத்தில் இன்று வியாழக்கிழமை பகல் 11 மணிக்கு விசேட ருத்திராபிஷேகம் இடம்பெறும். பிற்பகல் 4 மணிக்கு ஸ்ரீசபாரத்தின ஈஸ்வர சர்மா சமயச் சொற்பொழிவு நிகழ்த்துவார்.

[க]

★ ★ ★

வைத்திய கலாநிதி சி. சுப்பிரமணியம்(பி.எஸ்)நினைவுப் பேருரை இன்று வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு ஸ்கந்தவரோதயக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

வைத்திய கலாநிதி சி.சிவானந்தராஜா, சங்கானை உதவிக் கல்விப்பணிப்பாளர் திரு. அ. தற்பரானந்தன் ஆகியோர் பேருரைகளை நிகழ்த்துவார்கள். (க)

## விவேகானந்தர் தேசிய இளைஞர் தினம்

யாழ்ப்பாணம், ஜன.12

பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் நடத்தும் சுவாமி விவேகானந்தரின் தேசிய இளைஞர் தினம் இன்று மாலை 4 மணி முதல் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சிறப்பு விருந்தினர்களாக யாழ் அரச அதிபர் திரு. க. பொன்னம்பலம், மேலதிக அரச அதிபர் திருமதி. ப. திலகநாயகம்போல், பருத்தித்துறை பிரதேச செயலர் திரு ஆ. சிவசுவாமி ஆகியோர் கலந்து கொள்வர்.

சுவாமி விவேகானந்தரின் சிகாகோ நூற்றாண்டு பரிசளிப்பும் இடம்பெறும். (ஐ)

★ ★ ★

சுவாமி விவேகானந்தர் ஜயந்திவிழா இன்று பிற்பகல் 3 மணிமுதல் பண்டத்தரிப்புப் பிரதேச இந்து வாலிபர்சங்க விவேகானந்தா மனையில் நடைபெறும். [க]

## சங்கீத, நடன பரீட்சை பெறுபேறுகள்

யாழ்ப்பாணம்,ஜன12

1993 டிசம்பரில் நடைபெற்ற ஜி.சி.ஈ. (சா. த) பரீட்சையின் சங்கீத, நடன செயன்முறைப் பாடங்களுக்கான பெறுபேறுகள் உள்ளடக்கிய பாடசாலை பெறுபேறுகள் கடந்த செவ்வாய் யாழ்ப்பாணத்திற்கு எடுத்து வரப்பட்டுள்ளதாகவும் — அவற்றைக் கோட்டக் கல்விப் பணிமனைகளிலிருந்து சேகரிக்கும் படியும் —

வலயம் 1இன் கல்விப் பணிப்பாளர் செல்வி தி.பெரியதம்பி அறிவித்துள்ளார்.

(உ)

## மாநகரசபைக்கு 5 பரல் டீசல்

யாழ்ப்பாணம், ஜன. 11

யாழ். மாநகராட்சி மன்றத்தின் தேவைகளுக்கு பயன்படுத்துவதற்காக 5 பரல்கள் டீசலை மாதாந்தம் எடுத்து வருவதற்கு பாதுகாப்பு அமைச்சு தற்போது அனுமதி வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதற்கு முன்னர் மாதம் ஒரு பரல் டீசலை மாத்திரமே எடுத்து வருவதற்கு பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கியிருந்ததும்—

10 பரல்கள் டீசலை எடுத்துவருவதற்கு மாநகராட்சி மன்றம் தற்போது கோரிய போதும் 5 பரல்களுக்கு மாத்திரமே அனுமதி வழங்கப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது. [இ-4]

# படம் எடுத்த வேளையில் கரை ஒதுங்கிய சடலங்கள்

## வெளியீட்டு விழாவில் சூசை தகவல்

வல்வெட்டித்துறை, ஜன. 12

இன்று இங்கே வெளியிடப்பட்ட ''உயிர்ப்பூ'' வண்ணப்படம் எங்கள் மண்ணில் நிகழ்ந்த உண்மைச் சம்பவங்களையே கொண்டுள்ளது. இங்கு நாளாந்தம் நடந்த, நடக்கும் நிகழ்வுகளே வண்ணப்படமாகியுள்ளன.

இந்தப் படத்துக்கான காட்சிகளை எடுத்துக்கொண்டிருந்த போது, சடலங்கள் உண்மையாகவே கரை ஒதுங்கிக் கொண்டிருந்தன. அந்தக் காட்சியையும் இந்தப் படத்தில் சேர்த்துள்ளோம்; நீங்கள் பார்க்கலாம்.

இவ்வாறு தெரிவித்தார் கடற்புலிகளின் விசேட தளபதி சூசை

வல்வெட்டித்துறை, நெடியகாடு பிள்ளையார் கோயிலடியில் நேற்று நடைபெற்ற வண்ணப்படம் குறும்படம் மற்றும் ஒலிப்பதிவு நாடாக்கள் வெளியீட்டு விழாவில் பேசுகையில் இத்தகவலை அவர் வெளியிட்டார்.

உயிர்ப்பூ, செவ்வரத்தம்பூ படங்களினதும் விடுதலைப் போர் முரசு, சுதந்திர தாகம் பாடல் ஒலிப்பதிவு நாடாக்களினதும் வெளியீட்டு விழா கடற்புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் திரு. இளையவன் தலைமையில் நடைபெற்றது.

இவற்றை தளபதி சூசை வெளியிட்டு வைக்க, யாழ். மாவட்ட அரசியல் துறை பொறுப்பாளர் திரு. சி. இளம்பரிதி பெற்றுக் கொண்டார்.

வெளியீட்டுரையை கலை, பண்பாட்டுக் கழக பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை நிகழ்த்தினார்.

மதிப்பீட்டுரைகளை திருமதி நாச்சியார் செல்வநாயகம், திருமதி தர்மபூபதி சிதம்பரநாதன் ஆகியோர் நிகழ்த்தினர்.

''உயிர்பூ'' படத்தின் இயக்குநர் திரு. பொ. தாசன் ''செவ்வரத்தம்பூ'' இயக்குநர் ச. யேசுதாசன் ஆகியோர் விழாவில் கௌரவிக்கப்பட்டனர். (அ-155)

## ஆசிரியர் உதவு தொகை கொடுப்பனவு

யாழ்ப்பாணம், ஜன. 12

கல்விமேம்பாட்டுக்கழக ஆசிரியர்களுக்கான டிசெம்பர் மாத உதவு தொகைக் கொடுப்பனவுகள், இன்று முதல் கோட்டக்கல்வி அலுவலகங்களில் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சண்டிலிப்பாய், தெல்லிப்பழை கோட்டங்களைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு இன்று பிற்பகல் 3 மணிக்கும்– உடுவில், சங்கானை, கோப்பாய், சாவகச்சேரி கோட்ட ஆசிரியர்களுக்கு நாளை 13 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கும் — வழங்கப்படும். (அ)

## நாளை

காரைநகர் வாரிவளவு நல்லியக்கச்சபை 1994 ஆண்டு ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த. 27 காரைநகர் மாணவர்களையும் —

இச் சபை நடத்திய இரு முன்னோடிப் பரீட்சைகளில் சித்தியடைந்த காரைநகர் மாணவர்களையும் —

பாராட்டி அவர்களுக்கு அமரர் திருமதி கமலாதேவி கனகசபையின் ஞாபகார்த்தப் பரிசில்களை வழங்க உள்ளது. இது தொடர்பான வைபவம் நாளை வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு யாழ்ப்பாணம் வலந்தலை தெற்கு அ.மி.த.க பாடசாலையில் நடைபெறும்.

அதிபர் திரு. அ. கமலாகரன் தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் யாழ். வலயம் 1இன் கல்விப் பணிப்பாளர் செல்வி திலகவதி பெரியதம்பி பிரதம விருந்தினராக கலந்து கொள்வார்.

(க)

★ ★ ★

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை தொண்டமானாறு ஸ்ரீசெல்வச்சன்நிதி முருகன் ஆலயத்தில் நடத்தும் வாராந்த நிகழ்வுகளில் நாளை வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு சத்தியதாஸ் வில்லிசைக் குழுவினரின் 'தீர்க்க சுமங்கலி' வில்லிசை நடைபெறும்.

(க)

## கடலுக்குச்சென்ற மீனவர் ஒருவர் திரும்பவில்லை

சுழிபுரம், ஜன. 12

சுழிபுரம் திருவடி நிலைக்கு சமீபமாக உள்ள சவுக்கடிப் பகுதியில் இருந்து மீன்பிடிக்கச் சென்றவர்களில் ஒருவர் இன்னும்கரைதிரும்பவில்லை.

இவர் சுழியில் சிக்கியிருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

இரண்டு பிள்ளைகளின் தந்தையான வேலுப்பிள்ளை ஞானப்பிரகாசம் (வயது 40) என்பவரே கரை திரும்பாதவர் ஆவார்.

காணாமற் போனவரைத் தேடும் நடவடிக்கைகள் நேற்று மேற்கொள்ளப்பட்டன. (இ-28)

## பல்கலைக்கழக கல்லூரி மாணவருக்கு!

யாழ்ப்பாணம், ஜன. 12

வவுனியா இணைக்கப்பட்ட பல்கலைக் கல்லூரி மாணவர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு யாழ். நியூ மாஸ்ரர் கல்வி நிலையத்தில் நடைபெறவிருப்பதாக விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு அறிவித்துள்ளது. (உ-3)


## கல்வியாண்டு 93/94
## யாழ். பல்கலைக் கழகம்-வெளிவாரி

முதற் கலைத் தேர்வு — First In Arts (G. A. Q.)
முதல் வர்த்தக தேர்வு — First In Commerce (Ist InCom)

பதிவு செய்யத் தவறிய மாணவர்களுக்கு மீண்டும் பதிவுசெய்வதற்கு பல்கலைக் கழகம்

**16 - 01 - 1995** வரை

அனுமதி வழங்கி உள்ளது.

(A/L இல் கலை / வர்த்தக / கணித / விஞ்ஞான துறையில் 3 பாடங்களில சித்தியடைந்தவர்கள் பதிவை மேற்கொள்ளலாம்)

விவரங்களை எமது கல்லூரியில் பெற்றுக்கொள்ளவும்.

- எஸ். அருள் நங்கை -

புதிய உயர் கல்லூரி,
அரியகுளம் சந்தி, — யாழ்ப்பாணம்.

[சி/156]



## கண்ணீர் அஞ்சலிகள்

யாழ்ப்பாணம் ராஜா ரேட் சென்ரர் முன்னாள் பங்காளரும் தற்போது கொழும்பு பிரபல வர்த்தகரும் சுமித்தா ரேடிங் கொம்பெனி (S.T.C.) உரிமையாளருமான ச. புஸ்பநாதன் அவர்கள் 8 — 1 — 95 அன்று சிவபதம் அடைந்துவிட்டார். அவரின் பிரிவால் துயருறும் அவர் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ராஜா ரேட் சென்ரர்
இல. 03, அர்ச்சுனா சாலை,
யாழ்ப்பாணம்.
உரிமையாளர், ஊழியர்கள்

(8196)



## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி

நயினாதீவு
மு. துரைரத்தினம் — விஜயலட்சுமி
தம்பதியரின் சிரேஷ்ட புத்திரி
கிரித்திகா (கிருஷ்ணா)

தோற்றம்: 05 — 09 — 1987
மறைவு: 18 — 12 — 1991

ஆண்டு மூன்று கழிந்தாலும் என்றும்
இன்றும் எங்களுடைய நினைவில் மறக்க முடியவில்லை

உரிமையாளர்:
அம்பாள் வர்ணச் சோலை
(அம்பாள் சாறி சென்ரர்)
நிம் 11, நவீன சந்தை, சுன்னாம்.
(7860)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராஜீவ்காந்தி கொலை தொடர்பாக

# இலங்கையர்கள் எவரையும் இந்தியாவிடம் ஒப்படைக்கவில்லை

## வெளிவிவகார அமைச்சு மறுப்பு

கொழும்பு, ஜன. 12
இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலை தொடர்பாக 4 விடுதலைப் புலிகள் உறுப்பினர்களை இந்தியாவிடம் இலங்கை கையளிப்பதாக வெளிவந்துள்ள செய்திகளை வெளிவிவகார அமைச்சு மறுத்துள்ளது.

இந்தியாவில் இருந்து வெளியாகும் ''பயனியர்'' என்னும் பத்திரிகை, விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் நால்வரை இலங்கை இந்தியாவிடம் ஒப்படைக்கவிருப்பதாக செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தச் செய்தி ஒரு விசமத்தனமான பிரசாரம் என்றும் —

ராஜீவ் கொலை தொடர்பாக விடுதலைப் புலிகள் உறுப்பினர்களை இந்தியாவிடம் ஒப்படைப்பதாக எந்தக் கூட்டத்திலும் இலங்கை இந்தியாவுடன் பேசவில்லை என்றும் — வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

ராஜீவ் கொலை தொடர்பாக இலங்கையர் எவரையும் இந்தியாவிடம் கையளிக்கவில்லை என்றும் — வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது. (ஒ-3)

## பொறுப்பேற்றார்

கொழும்பு, ஜன. 12
தென் மாகாண ஆளுநராக நியமனம் பெற்ற டாக்டர் நெவில் சனகரத்ன நேற்று தமது பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டார். [ஒ]

## வதிவிட வேளாண்மை போட்டி

யாழ்ப்பாணம், ஜன. 12
தீவகத்தில் இருந்து இடம் பெயர்ந்தோருக்கான வதிவிட வேளாண்மை போட்டிக்குரிய முடிவு திகதி எதிர் வரும் 15ஆம் திகதியென ஊர்காவற்றுறை, வேலணை பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

போட்டியில் கலந்து கொள்ள விரும்புவோர் 1 பரப்புக் காணி பயிர்ச்செய்கைக்கு இருந்தால் போதுமானது. மேலதிக விவரங்களை கிராம சேவையாளர், உற்பத்திக் குழு, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம், கமநல சேவை நிலையம், விவசாயப் போதனாசிரியர் போன்றோரிடம் இருந்து பெற்றுக் கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டது. [ஒ-1]

ஹமில்டனின் உறுதியை அடுத்து

# உண்ணாவிரதத்தை கைதிகள் கைவிட்டனர்

கொழும்பு, ஜன. 12
மட்டக்களப்பு சிறைச்சாலை தடுப்பு முகாமில் காவலில் உள்ள 94 தமிழ் இளைஞர்களும் தாம் ஆரம்பித்த உண்ணாவிரதப் போராட்டத்தைக் கைவிட்டுள்ளனர் என்று கொழும்புப் பத்திரிகை ஒன்று நேற்று செய்தி வெளியிட்டுள்ளது.

உண்ணாவிரதம் இருக்கும் தமிழ் இளைஞர்களின் விடுதலை தொடர்பாக 48மணித்தியாலங்களில் நிவாரணம் வழங்குவதாக பாதுகாப்பு அமைச்சு செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா உறுதி மொழி வழங்கியதாகவும்—

அதையடுத்து உண்ணாவிரதிகள் தமது போராட்டத்தைக் கைவிட்டனர் என்றும்—அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ.3)

## பாராட்டு விழா

யாழ்ப்பாணம், ஜன. 12
சமாதான நீதிவானாக திரு. சி. சி. வரதராசா நியமனம் பெற்றுள்ளதை ஒட்டிய பாராட்டு விழா எதிர்வரும் 16 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்தில் இளைப்பாறிய அதிபர் திரு. கா. கணேசதாசன் தலைமையில் நடைபெறும். [ஐ]

## சிசுவின் சடலம்!

தென்மராட்சி, ஜன. 12
மீசாலை புத்தூர் சந்தியில் — விதியோரத்தில் — குறை மாதப் பெண் சிசுவின் சடலம் ஒன்றை சாவகச்சேரி காவல்துறையினர் கடந்த அதிகாலை கண்டெடுத்தனர்.

சிசுவின் சடலம் சாவகச்சேரி ஆஸ்பத்திரி சவச்சாலையில் வைக்கப்பட்டிருந்தது. சடலத்தை யாழ். மருத்துவ பீடத்துக்கு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. (ஒ-117)

## 1,500 நாய்கள் பிடிக்கப்பட்டன

யாழ்ப்பாணம், ஜன. 12
யாழ். மாநகராட்சி மன்றப் பகுதியில் கடந்த ஆண்டு மட்டும் ஆயிரத்து 500 கட்டாக்காலி நாய்கள் பிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. [ஒ-117]

# யுத்தம் தொடர்ந்தால் நமது மண் அழிந்து விடும்

## பிரதி அமைச்சர் கூறுகிறார்

கொழும்பு, ஜன. 12
''வடக்கு — கிழக்கு யுத்தம் தொடர்ந்தால் நமது மண் அழியும் நிலைதான் ஏற்படும் என்று முஸ்லிம் காங்கிரஸ் பிரமுகரும் பிரதி அமைச்சருமான ஹிஸ்புல்லா தெரிவித்துள்ளார்.

இலவச பாடப்புத்தக விநியோகத்தை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

ஆயுதங்கள் மோதிய பூமியில் அமைதித் தென்றல் இன்று வீசுகிறது என்றும் அவர் குறிப்பிட்டார். (ஒ-3)

தமிழ்க்குழு கொலைப் பயமுறுத்தல்:

# வவுனியா பொலீஸில் 8 குடும்பங்கள் சரண்!

தமிழ்க்குழு ஒன்றின் உறுப்பினர்களால் விடுக்கப்பட்ட கொலைப்பயமுறுத்தலை அடுத்து எட்டு குடும்பங்கள் வவுனியா பொலீஸில் தஞ்சமடைந்துள்ளதாக கொழும்பு பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது

தமிழ்க்குழு ஒன்றின் உறுப்பினர்கள் எனக்கருதப்படும் ஆயுதம் தாங்கிய சிலர் வவுனியாவில் உள்ள எட்டு வர்த்தக நிலையங்களுக்குள் அத்து மீறி புகுந்து உரிமையாளர்களையும், அவர்களது குடும்பத்தினரையும் கொலை செய்யப்போவதாக பயமுறுத்தியதாகவும்—

உயிரைப் பாதுகாப்பதற்காக வர்த்தக உரிமையாளர்கள் தமது குடும்பங்களுடன் பொலீஸ் நிலையத்தில் தஞ்சமடைந்துள்ளதாகவும் — தெரிவிக்கப்பட்டது. (ஒ-3-6)

# இந்திய மீனவர் அறுவர் காணாமற் போயினர்

சென்னை, ஜன. 12
கடந்த வியாழக்கிழமை கடலில் காணாமற்போன 6 இந்திய மீனவர்களில் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டிருப்பதாக தமிழ் நாடு காவல் துறையினர் அறிவித்துள்ளனர்.

பாம்பன் பகுதியில் இருந்து மீன் பிடிக்கச் சென்றவர்களே காணாமற்போய் உள்ளனர்.

கச்சதீவுக் கடலிலேயே இவர்களில் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. காணாமற்போன ஏனைய மீனவர்களைத் தேடும் முயற்சியில் தமிழ் நாடு கரையோர காவல் துறையினர் ஈடுபட்டுள்ளனர். [இ]

பாப்பரசரின் கொழும்பு விஜயம்:

# நெரிசலைத் தவிர்க்க காலி முகத்திடலில் ஏற்பாடு

பரிசுத்த பாப்பரசரின் தரிசனத்தைப் பெற கொழும்பு காலிமுகத்திடலில் திரளும் மக்கள் நெரிசலுக்கு உள்ளாகாமல் தவிர்க்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அங்கு ஒவ்வொரு பிரிவாக ('புளோக்'குகளாக) இடவசதிகள் செய்யப்பட்டு வருகின்றன.

லட்சக்கணக்கானோர் கூடுவார்கள் என்ற காரணத்தினால் பாதுகாப்பு ஏற்பாடுகள் பெரியளவில் செய்யப்பட்டுள்ளன. பாப்பரசரின் உபசரணை அமைச்சராக சி. வி. குணரத்ன இருப்பார்.

காலி முகத்திடலில் பெரும் பொருள் செலவில் மிகுந்த பாதுகாப்புடன் கூடிய உயரமான மேடை ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது.

நுழைவாயில் பகுதியில் விசேட வரவேற்புப்பீடம் ஒன்றும் நிறுவப்பட்டுவருகிறது. (ஒ)

இரு வருடங்களின் பின்னர்

# மட்டு. இரவு தபால் ரயில் மீண்டும் நாளை முதல்

மட்டக்களப்பு இரவு ரயில் தபால் சேவை நாளை வெள்ளிக்கிழமை முதல் மீண்டும் ஆரம்பமாக உள்ளது

கடந்த இரண்டு வருடங்களாக இந்தச்சேவை ரத்துச் சய் யப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

இரவு 11 மணிக்கு கொழும்பு கோட்டையில் இருந்து புறப்படும் இந்த ரயில், மறுநாள் காலை 8.50 மணிக்கு மட்டக்களப்பைச் சென்றடையும்.

மட்டக்களப்பில் இருந்து பிற்பகல் 3,20 மணிக்கு இந்த ரயில் புறப்பட்டு, மறுநாள் அதிகாலை 1.20 மணிக்கு கொழும்பு கோட்டையை வந்தடையும். (ஒ)

# ராணுவத்தினர் பாவிக்கும் கிரனேட் கொள்ளையரிடம்!

''இராணுவத்தினர் பாவிக்கும் ரக கிரனேட்டுக்கள் எந்த வழியிலோ கொள்ளையர்களின் கைகளுக்கு சென்று விடுகின்றன'' என்று சிரேஷ்ட பொலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இராணுவ முகாம்களில் இருந்து எந்த வழியிலோ கிரனேட்டுக்கள் கொள்ளையர்களுக்குச் சென்று விடுகின்றன என்றும் —

அண்மைக் காலங்களில் நடந்த பல கொள்ளைகளில் படையினர் பாவிக்கும் கிரனேட்டுக்களையே கொள்ளையர்கள் பாவித்திருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது என்றும் — அவர் கூறினார். (ஒ-3)



முகவர்: ஸ்ரீ விக்னேஸ்வரா ஸ்டோர்ஸ் சாவகச்சேரி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

பொங்கல் வாழ்த்துமடல், பொருளியல் நோக்கு நூல் நிலையங்களுக்கு ஏற்ற நாவல்கள், கொப்பி வகைகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் ஸ்ரீகாந்த் புத்தகசாலை யாழ் - நல்லூர். மக்மிலன் புத்தகசாலை யாழ். மற்றும் கலண்டர், டயறிகள் மலிவு விலையில். [சி-277]

Brahma [ஹங்கேரியன் பிறாமா], வெலுலை (அழகிய பொன்நிற தாராக்குஞ்சுகள்), சில்க்கி (பொமனேறியன் போன்ற கோழி) இவற்றின் குஞ்சுகளும், முட்டைகளும், இலிக்கோழி சேவலும் விற்பனைக்குண்டு. N. ரமேஸ் மே/பா K. நித்தியானந்தன், சித்தன்கேணி (சுப்பர் சொனிக் அடுத்த இடம்) [34664]

## மலிவு விற்பனை

எங்களிடம் சண்(Sun)மார்க் நூல் வகைகள் இறக்குமதி செய்யப்பட்ட Bratape எலாஸ்டிக் மலிவு விலையில் விற்பனைக்குண்டு. சிறிமுருகன், இல. 303, காங்கேசன்துறை சாலை, யாழ்ப்பாணம். (34635)

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி இந்துக்கல்லூரி, கந்தசுவாமி கோயில் சமீபமாக, டச்சுவீதியிலிருந்து சிறிது தூரத்தில் தென்னை-மாமரங்கள் உள்ள, சுற்றுமதிலும், கேற்றும்கொண்ட, ஒன்றரைப் பரப்புக்காணி உடன் விற்பனைக்குண்டு. விலை விவரத்துடன் கடிதமூலம் தொடர்புகொள்க. விளம்பர இல. 746, மே/பா, உதயன், யாழ்ப்பாணம். (34656)

## இலகு திருமண சேவை

34 வயது, உத்தரட்டாதி, செவ்வாய் குற்றமற்ற ஜேர்மன் மணமகன் யாழ். உள்ளவர். பொருத்தமான மணப்பெண் உடன் தேவை. விவாகம் செய்து அழைக்கலாம். தொடர்புகொள்ளவும். து. விமலா யாழ். நாச்சிமார் கோயிலடி. [34661]

## வெளிவந்துவிட்டன!

மகரகம தேசிய கல்வி நிறுவகத்தில் புதிய பாடத். திட்டத்திற்கமைய உருவாக்கப்பெற்ற பாலர் கணிதம், சிறுவர் கணிதம், சுற்றாடற் கல்வி, தமிழ் செயல் நூல்கள் வெளிவந்துவிட்டன. ஆக்கம்: இலக்கிய வித்தகர் த. துரைசிங்கம். விற்பனையாளர் பூபாலசிங்கம் பொத்தகக் களஞ்சியம், யாழ்ப்பாணம். (34587)

## ரி. வி., டெக் திருத்துநல்

சகல றேடியோக்கள் ரி.வி. டெக் எல்லா விதமான மணிக்கூடுகளையும் பழுது பார்த்துக்கொள்ள டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி [ஆரியகுளம்சந்தி], யாழ்ப்பாணம். கிளைகள்: கண்டி வீதி, சாவகச்சேரி. மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை. [சி-254]

## புத்தகம்

ஆண்டு 5—8 Brightஇன் மாணவர்களுக்கான கட்டுரை மஞ்சரி 50/-. ஆண்டு 9—11 Brightஇன் மாணவர்களுக்கான கட்டுரை மஞ்சரி 45/-. பூபாலசிங்கம் புத்தகசாலை மற்றும் பிரபல புத்தகசாலைகளில் பெற்றுக்கொள்ளலாம். [34566]

## கோழிக்குஞ்சு விநியோகம்

11ஆம் திகதி வெள்ளிக்கிழமை கறுப்பு இறைச்சிக் கோழிக்குஞ்சுகள் விநியோகிக்கப்படும். ஓடர்கொடுத்தவர்கள் உடன் பெற்றுக்கொள்ளவும். மல்வம் வீதி ஊடாக சிங்கம் வீதி, உடுவில். [7859]

## மாற்றப்பட்ட சைக்கிள்

எனது J. C. C. 51529 இல. லேடீஸ் அமாலா 6-1-95 இரவு இனேஸ் பேக்கரி முன்பாக மாற்றப்பட்டுவிட்டது. மாற்றி எடுத்தவர்கள் தனது சைக்கிளை பின் வரும் விலாசத்தில் மாற்றி பெற்றுக் கொள்ளவும்: ச. பரமசிவநாதன் புக்கை நின்னிப் பிள்ளையார் வீதி, கூழாவடி, ஆனைக்கோட்டை. [8193]

## சங்கீதம் வினா-விடை

வட இலங்கை சங்கீத சபை நடத்தும் தரம் 2, 3 பரீட்சைகளுக்கு தோற்றுவோருக்கும் ஆண்டு 6—11 வரை சங்கீதம் கற்போருக்கும் பயன் தரும் சங்கீதம் வினா-விடை நூல் விற்பனையாகிறது. ஆக்கம்: செல்வி "அநேகா" விற்பனை: ஸ்ரீ சுப்பிரமணிய பொத்தகக் களஞ்சியம், பூபாலசிங்கம் பொத்தகக் களஞ்சியம், யாழ்ப்பாணம். (34586)

உ

# உள்ளங்கனிந்த நன்றியை சமர்ப்பிக்கின்றோம்

சிவத்தமிழ்ச்செல்வி

**தங்கம்மா அப்பாக்குட்டி J. P.**

அவர்களின்

## 70 ஆவது பிறந்தநாள் வைபவத்தை (07 - 01 - 1995)

முன்னிட்டு

எமது நன்றிக்குரியோர்:

01. திருக்கோயில் சிவாச்சாரியார்களும் - தேவஸ்தானங்களும்
02. நல்லை ஞானசம்பந்தர் ஆதீனம்
03. யாழ். ஆயர் இல்லம்
04. யாழ். கத்தோலிக்க மறைமாவட்டம்
05. திருமறைக் கலா மன்றம்
06. யாழ். பல்கலைக்கழகம்
07. இராமநாதன் நுண்கலைப்பீடம்
08. அகில இலங்கைக் கம்பன் கழகம்
09. நல்லூர் இளங்கலைஞர் மன்றம்
10. கலை இலக்கியக் களம் - தெல்லிப்பழை
11. குரும்பசிட்டி சன்மார்க்க சபை
12. உதயன், ஈழநாதம், ஈழநாடு நிறுவனங்கள் இவற்றின் மூலம் வாழ்த்து அமைத்துப் பாராட்டியோர்கள்
13. யாழ். இந்துப் பேரவையினர்
14. வர்த்தக மன்றங்கள்
15. இளைஞர் மன்றங்கள் மற்றும் சமூக அமைப்புக்கள்
16. இராமநாதன் கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் மற்றும் கல்லூரிகளின் அதிபர்கள்
17. இந்நாட்டின் அனைத்துச் சமய சமூக நிறுவனத்தைச் சேர்ந்த அன்பர்கள்
18. கௌரவ விருந்தினை ஏற்றுக் கொண்ட பேரறிஞர்கள் இசைவல்லார்கள்
19. விழாவில் காலையும், மாலையும் கலந்து சிறப்பித்ததும் அன்றி பாமாலை, பூமாலை, பட்டாடை, பரிசுப்பொருள்கள் அறநிதியத்துக்கு அன்பளிப்புகள் வழங்கி மகிழ்வித்த அன்பர்கள்
20. வருகை தந்தோரை உபசரித்து விருந்தளித்து மகிழ்வித்த - துர்க்காதேவி பெண்கள் தொண்டர்சபை தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம் துர்க்காபுரம் மகளிர் இல்லம் ஆகிய அமைப்புக்கள் ஆகியவற்றுக்கு எமது உளங்கனிந்த நன்றி உரித்தாகுக.

இங்ஙனம்,
சிவத்தமிழ்ச் செல்வி
**தங்கம்மா அப்பாக்குட்டி J. P.**
அவர்களின்
பிறந்தநாள் அறநிதியச் சபை.

துர்க்காபுரம்,
தெல்லிப்பழை.
11-01-1995 [34662]

# MATHS CENTRE

NELLIADY.

**95 DAY CLASS**

செவ், வியா.

★ CHEMISTRY 11-00—12-30 a.m.

★ PHYSICS 12-30—2-00

[34648]

## பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் கோயில்

மார்கழி மாத

# ★ 9-ம் திருவிழா விஞ்ஞாபனம் ★

ஊர்களிக்கும் மார்கழியில் போரொழிக்க வருவோனும்
பார் கொடுக்கத் தமிழற்கு பாற்கடல் விட்டெழுவோனும்
நல்ல பேரொளிக்குள் தேர்காட்டி பெருந்தலத்தில் வழிகாட்டி
சீர் செழிக்கத் தமிழற்கோர் சேதி கொண்டு வருவோனும்
சங்கொலிக்கச் சக்கரமும் நாமமும் தான் ஒலிக்க
பொன்னாலைக் கோயிலென்னும் புண்ணியதலம் தோன்றும்
இது பார்முழுக்கப் படைநடத்திப் பைந்தமிழர் துயர் துடைக்கும்
கண்ணாளன் கண்ணனின் பொன்னாலைக் கோயில்.

ஆக்கியோன்: மூளாயூர் ஆசுகவி, சிவசுப்பிரமணியம்

(34506)

யாழ். மாவட்ட
வணிக கழகங்களின் இணையம் விடுக்கும்

# முக்கிய அறிவித்தல்

தைப்பொங்கல் பண்டிகையை முன்னிட்டு எதிர் வரும் 14-01-1995 சனிக்கிழமை முழுநாளும் கடைகளைத் திறந்து வியாபாரம் மேற்கொள்ளலாம் என அனைத்து வணிகர்களுக்கும் அன்புடன் அறியத் தருகின்றோம்.

நன்றி.

தலைவர். செயலாளர்.

(சி-153)

# ஓராண்டு கண்ணீரஞ்சலி



## அமரர் சின்னத்துரை சதானந்தன்

(இளைப்பாறிய தபாலதிபர், மேற்பார்வையதிகாரி)

அன்னை மடியில்: 01 — 12 — 1927 இறைவன் அடியில்: 24 — 12 — 1993

திதி: 12 - 01 - 1995

எங்கள் பாச தெய்வமே பப்பா!
ஆண்டொன்று ஆகுதப்பா உங்கள் பாசமுகம் பார்த்து
நேயமுடன் மனைவி நானும் பாசமுடன் காத்திருக்க
வார்த்தை ஒன்றும் பேசாமல் விரைந்தோடிப் - போனீர்கள்.
கையாலே மலரிட்டு கண்ணீரால் அதை நனைத்து
கதறியே அழுகின்றேன் காலமெல்லாம் உமை நினைத்து
உள்ளத்திலே உமை நினைத்து உருகியே வணங்குகின்றேன்.
எண்ணரிய தவமிருந்து ஈன்றீர்கள் இரு புதல்வரை
எழில் திகழ உடனிருந்து காத்தீர்கள் பப்பா!
பிஞ்சுமனம் மாறிவரும் வேளைதன்னில்
சிறப்புடன் வாழ வாழ்வமைத்து தந்தீர்கள் பப்பா!
மருமக்கள் எங்களை மனமார வாழ்த்திவிட்டு,
எம்மை மனம் கலங்க வைத்துவிட்டு,
பேரப்பிள்ளைகள் நாங்கள் ஆசையுடன் - காத்திருக்க
எம்மைவிட்டு ஏன் ஓடிப்போனீர்கள் தாத்தா!
TATA TATA என்று ஆசைமுத்தங்கள் பல கூறிவிட்டு
அம்பாளின் காலடியில் சேர்ந்துவிட்டீர்களே பப்பா!

உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரிகள்.

தகவல்:
திருமதி சரஸ்வதி சதானந்தன்,
ஆறுபடை வீடு.
35, விபுலானந்தர் வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம். (34604)

# 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 10 — 06 — 1916



மறைவு: 23 — 12 — 1993

## அமரர் கந்தவனம் பரமானந்தம்

(மண்டைதீவு -6)

திதி: 12 — 01 — 1995

பாசமே உருவான தந்தையே - ஆண்டொன்றென்ன
ஓராயிரம் ஆண்டுகள் சென்றாலும் உங்கள் - நினைவுகள்
எங்கள் நெஞ்சை விட்டகலாது
எம்முள்ளங்களில் அணையாத் தீபமாக இருப்பீர்கள்.

உங்கள் பிரிவால் துயருறும்;
மனைவி, மக்கள், மருமக்கள்,
மைத்துனி, பெறாமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

70/4, [illegible]
[illegible] (34636)

## பாடசாலை அதிபர்கள் மூலமாக

# அடையாள அட்டைக்கு மாணவர் விண்ணப்பம்

கொழும்பு, ஜன. 12

16 வயதைப் பூர்த்திசெய்த மாணவர்கள், அடையாள அட்டைக்கான தமது விண்ணப்பங்களை பாடசாலை அதிபர்கள் மூலம் அனுப்பி வைக்க வேண்டும் என்று ஆட்பதிவுத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்த விண்ணப்பங்களை தமக்கு நேரடியாக அனுப்பி வைக்குமாறு ஆட்பதிவு ஆணையாளர் விஜேரணசிங்க அதிபர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பாடசாலையில் வெளியேறிய 16 வயதைப் பூர்த்தியானவர்கள், தங்களது விண்ணப்பங்களை கிராம அதிகாரிகள் மூலம் அனுப்பிவைக்க வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டது.

ஆட்பதிவுத் திணைக்களம் கடந்த வருடம் 4 லட்சத்து 80 ஆயிரத்துக்கும் அதிகமான தேசிய அடையாள அட்டைகளை விநியோகித்துள்ளது என்றும் —

இவற்றில் 73 ஆயிரம் அடையாள அட்டைகள் ஜி. சி. ஈ. சாதாரண, உயர்தர பரீட்சைகளுக்குத் தோற்றும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஓ)

## வினாத்தாள்கள் வந்தன

வடமராட்சி, ஜன. 12

விவசாய ஆசிரியர் தெரிவுப் பரீட்சைக்கான வினாத்தாள்களும், அனுமதி அட்டைகளும் நேற்று முன்தினம் எடுத்து வரப்பட்டுள்ளன.

இப்பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் தமக்குரிய அனுமதி அட்டைகளை நாளை 13 ஆம் திகதி யாழ். கல்விவலயம் ஒன்றில் பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஜ-173)

# சில்வர் சீல்ட்

**தயாரிப்புக்களான**

☆ நைலோன் கொட்டன் சொக்ஸ்
☆ எலாஸ்டிக்
☆ பட்டன்கள்
☆ சிப்
☆ லேஸ்

யாவற்றிற்கும்




**சிறி முருகன்**

303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்

[34633]

கொக்குவில் இந்துக்கல்லூரி
பழைய மாணவர் சங்க

# பொதுக்கூட்டம்

இடம்; கல்லூரி மண்டபம்

காலம்: 12.02.1995 ஞாயிறு மு.ப. 10.00மணி

அங்கத்தவர்கள் யாவரையும் கலந்து கொள்ளும்படியும், புதிதாக அங்கத்தவர்களாக சேர விரும்புவோர் 31-01-95க்கு முன் அங்கத்தவர்களாகச் சேர்ந்து கொள்ளும் படியும் பணிவாக வேண்டுகிறோம்.

இ. இராசலிங்கம்,
உப-செயலாளர்

(8194)

# ஆத்மார்த்த அஞ்சலி

யாழ். அரசடி விநாயகர் ஆலயப் பரிபாலன சபையில் அங்கத்தவரும் தர்மகர்த்தாக்களில் ஒருவருமான நிர்வாகசபை அங்கத்தவருமான சிவபதமடைந்த

## திரு. சின்னையா செல்லத்துரை

அவர்களின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல அரசடி விநாயகரைப் பிரார்த்தித்துக் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

யாழ். அரசடி விநாயகர் ஆலய
பரிபாலன சபை.

[34666]

# 31-ம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்: 18 — 04 — 1907



மறைவு: 13 — 12 — 1994

## அமரர் நாகலிங்கம் சுப்பிரமணியம்

(முன்னாள் மலாயன் மருந்தக உரிமையாளர்)

அன்பால், அறிவால், பண்பால் எங்களை எல்லாம் வழிநடத்தி வாழவைத்த எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்;

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

50/2, செட்டித்தெரு,
நல்லூர், யாழ்ப்பாணம். [34667]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்**
292/2 காவலர் வீதி
யாழ்ப்பாணம்

## நம்பிக்கையை வேரறுக்கும்!

வடக்கு-கிழக்கு கடற்பிரதேசத்தில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவதற்கு அரசாங்கம் கட்டுப்பாடு விதித்துள்ளது குறித்து தமிழீழ விடுதலைப்புலிகள் தமது கடுமையான ஆட்சேபத்தைத் தெரிவித்துள்ளார்கள். இந்தக்கட்டுப்பாடு போர் இடைநிறுத்த உடன்பாட்டை மீறுவதாகவும் அவர்கள் அரசாங்கத்துக்கு அனுப்பிய கடிதத்தில் அதிருப்தி தெரிவித்திருக்கிறார்கள்.

ஈழப்போர் இரண்டு ஆரம்பமாகிய ஒருசில நாள்களில், அரசாங்கம் கடல்வலயத் தடைச் சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வந்து தமிழ்ப் பகுதிவாழ் மீனவர்களை தொழிலற்றவர்கள் ஆக்கியது. தமது ஜீவனோபாயத்துக்காக கரைகளில் மீன்பிடிக்கமுயன்ற மீனவர்களைச் சுட்டும், தாக்கியும்கடற்படையினர் அவர்களது தொழிலை உயிர்ப்பாதுகாப்பில்லாத ஒன்றாக்கினர். அதற்கும் மேலதிகக் கொடுமையாக தொழில் செய்வதற்குத் தேவைப்படும் படகுகள், வலைகள் போன்ற தொழிற் கருவிகளை நாசமாக்கி மீனவர்களை முற்றாகவே தொழில் இழக்கச் செய்தனர்.

தமிழ்ப்பகுதி வாழ் மீனவர்களை மட்டும் அரசாங்கம் பழிவாங்கவில்லை. தமிழீழக் கடற்பிரதேசத்தின் கடல் வளத்தையும் பயன்படுத்த விடாமல் வீணடிக்க வைத்தது. 1983 ஆம் ஆண்டுக்கு முன்னர், இலங்கை முழுவதினதும் கடல் உணவுத் தேவையில் சுமார் நாற்பது சதவீதத்தை தமிழ்ப்பகுதி கடற்பிரதேச வளமே ஈடுசெய்து வந்தது.

கொழும்பு வாழ் சிங்கள மக்கள் யாழ்ப்பாணத்துக் கறுத்தக் கொழும்பான் மாம்பழத்தையும், இராசவள்ளிக் கிழங்கையும் விரும்பி வாங்குவது போல, முல்லைத்தீவு, மயிலிட்டி மீன் வகைகளை விழுந்தடித்து வாங்கிய காலம் ஒன்றுண்டு

தமிழ் மக்களின் அன்றாட வாழ்க்கையை இயல்பு நிலைக்குத் திருப்பி எடுப்பதற்கு, கடல் வலயத் தடைச் சட்டமும் நீக்கப்பட வேண்டும் என்பது குறித்து அரசாங்கத்திடம் ஏற்கனவே வற்புறுத்தப்பட்டிருந்தது. அப்படியிருக்க, வடக்கு-கிழக்கு கடற் பிரதேசத்தில் குறிப்பிட்ட பகுதிகளிலேயே மீன்பிடிக்கலாம் என்று அரசு கட்டுப்பாடு விதித்திருப்பது கடல் வலயச் சட்டம் தொடர்ந்து நடைமுறையில் உள்ளதாகவே அர்த்தப்படும்.

மீன்பிடித் தொழிலுக்கு உகந்த நேரமாகக் கருதப்படுவது இரவு. இரவில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடக்கூடாது என்று தடை விதித்திருப்பதும் தமிழ்ப்பகுதி மீனவரின் தொழிலை மறைமுகமாகப் பறிப்பதாகும்.

தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரனும், ஜனாதிபதி சந்திரிகாவும் கைச்சாத்திட்ட போர் இடைநிறுத்தப் பிரகடனத்தின் மூன்றாவது சரத்தில் —

சட்டபூர்வமான மீன்பிடித் தொழிலுக்கு இடையூறு விளைவிக்கப்படமாட்டாது— என்று மிக அழுத்தம் திருத்தமாகக் கூறப்பட்டிருக்கிறது.

அதனைக் கண்டு சந்தோசமடைந்த தமிழ் மீனவர்கள் போர் இடைநிறுத்தம் நடைமுறைக்கு வந்த எட்டாம் திகதியே தமது தொழிலை மீண்டும் ஆரம்பித்தனர். ஆனால் போர் இடைநிறுத்தம் அமுலுக்கு வந்த 42 மணி நேரத்தில் அரசாங்கம் மீன்பிடிப்பதற்குக் கட்டுப்பாடு விதித்து தமிழும் மீனவர் வயிற்றில் மீண்டும் நெருப்பைக் கொட்டியிருக்கிறது!

போர் இடைநிறுத்தப் பிரகடனத்தை இராணுவப் பக்கத்தால் மீறாமல், இப்படி சிவில் பக்கத்தால் மீறுவது கண்ணியமற்ற கண்டிக்கப்பட வேண்டிய செயலாகும்.

இது போலவே அரசு தனது வாக்குறுதிகளை மீறும் என்ற சந்தேகத்தைத் தமிழ் மக்கள் மனதில் உண்டாக்கி, இப்போது உருவாகி வரும் நல்லெண்ணத்தையும், நம்பிக்கையையும் இச் செயல் வேரறுக்கும் என்பதனை அரசு மறந்துவிடக்கூடாது!

# போர் இடை நிறுத்தத்தை நீடிக்க
# 3 ஆம் கட்டப் பேச்சில் ஆராய்வு

கொழும்பு, ஜன. 12

அரசுக்கும் — விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடந்த 8 ஆம் திகதி முதல் ஏற்பட்டுள்ள போர் இடைநிறுத்த உடன்பாட்டை மேலும் நீடிக்கும் பேச்சுக்கள் எதிர்வரும் சனியன்று— 3ஆம் கட்டப்பேச்சுக்களின்போது— ஆராயப்படுமென்று இலங்கை வானொலி அறிவித்தது.

விடுதலைப் புலிகள் தலைவர் வே. பிரபாகரனுக்கும், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கும் இடையில் ஏற்பட்ட போர் இடைநிறுத்த உடன்படிக்கை எதிர்வரும் 22ஆம் திகதியுடன் முடிவடைவதாகவும்—

இந்த உடன்படிக்கையை மேலும் நீடிக்கவேண்டிய தேவை குறித்து யாழ்ப்பாணம் செல்லும் அரச குழுவினர் விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளுக்கு தெரிவித்து முடிவு செய்வர் என்றும்— தெரிவிக்கப்பட்டது. (ஒ-3)

### காலியாகவுள்ள தேசியப்பட்டியல் வெற்றிடம்
## தமிழர் ஒருவரை எம். பியாக்க ஐ. தே. க தலைமைப்பீடம் விருப்பம்!

கொழும்பு, ஜன. 12

கிராண்ட்பாஸ் குண்டுவெடிப்பில் பலியான ஐ.தே.க தேசியப்பட்டியல் எம். பிக்களான ஜி. எம். பிரேமசந்திர டாக்டர் காமினி விஜேசேகர ஆகியோரின் நாடளுமன்ற வெற்றிடங்கள் இதுவரை நிரப்பப்படவில்லை. பெரும்பாலும் இந்த மாதக் கடைசியிலேயே புதிய நியமனங்கள் செய்யப்படும் எனத் தெரியவருகிறது.

காலியான இந்த இருஇடங்களில் ஒன்றுக்கு தமிழர் ஒருவரை எம். பியாக நியமிப்பதற்கு ஐக்கிய தேசியக்கட்சி உயர்பீடம் விருப்பம் கொண்டுள்ளது என்றும்—

கொழும்பு மாநகர பதில் மேயர் கே. கணேசலிங்கத்தை ஐ.தே.க நாடியுள்ளது என்றும் நம்பகமாகத் தெரியவருகிறது.

இது பற்றி பதில் மேயர் கணேசலிங்கம் தெரிவித்திருப்பதாவது—

நாடாளுமன்ற கதிரையை அலங்கரிப்பது இன்று எமக்கு முக்கியமில்லை. இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அர்த்த புஷ்டியான நடவடிக்கை எடுத்து வருகிறார். அவரின் இந்த முயற்சிக்கு ஐ தே.க. உதவ வேண்டும். அப்போது தான் இனப்பிரச்சினைக்கு சுமுகமான முடிவு கிட்டும்.

இது பற்றி நான் ரணில் விக்கிரமசிங்காவிடம் நன்கு எடுத்துக் கூறியுள்ளேன். நொந்து போயுள்ள தமிழ் மக்களின் இதயங்களை வென்றெடுக்க வேண்டுமானால் இனப்பிரச்சினைக்கு ஜனாதிபதி எடுத்தும் நடவடிக்கைகளை ஆதரித்து ஐ.தே.க பகிரங்க அறிக்கை வெளியிட வேண்டும். இதுவே எனது இன்றைய வேண்டுகோளாகும் — என்றார் (ஐ)

### அவசரகால சட்டம் நீக்கப்படும்?

கொழும்பு, ஜன. 12

வடக்கு - கிழக்கில் அமுலில் உள்ள அவசரகாலச் சட்டத்தை அடுத்த மாதம் அளவில் நீக்கக் கூடிய நிலை ஏற்படும் என்று பாதுகாப்பு பிரதி அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்த நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (உ-3-6)

## கிழக்கு பல்கலை. அபிவிருத்திக்கு விசேட குழு

கொழும்பு, ஜன. 12

கிழக்கு பல்கலைக்கழக அபிவிருத்திக்காக விசேட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுத் தலைவர் பேராசிரியர் சிறிவீர தலைமையில் நியமிக்கப்பட்டுள்ள இக்குழுவில், கிழக்கு பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சந்தானம், மூதவை உறுப்பினர்கள், மற்றும் கிழக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இடம்பெற்றுள்ளனர்.

இக்குழுவினர் பல்கலைக்கழகத்தை அபிவிருத்தி செய்யும் திட்டங்களை ஆராய்வர். (ஒ-3)

## புலிகளின் குரல் வானொலியில்

### 12 — 01 — 1995
**வியாழன் இரவு**

- ★ 8-01 —ஊர்சுற்றும் ஒலிவாங்கி
- ★ 8-10 — குயிலோசை — வேலணையூர்சுரேஸ் எழுதிய ''எழுதாக் கவிதைகள்'' கிராமிய நிகழ்வு
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40—தரிசனம்— யாழ். பல்கலைக்கழக புவியியல்துறை விரிவுரையாளர் திரு.குகை ஆனந்தனுடன் செவ்வி
- ★ 9-00 — மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்.

### 13 — 01 — 1995
**வெள்ளி காலை**

- ★ 7-02 — மாவீர வணக்கம்
- ★ 7-15 — நீங்கள் கேட்டவை
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-40—நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி
- ★ 8-00 மணிக்கு காலை நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்.

### தமிழீழ வானொலி
**வியாழன் மாலை ஒலிபரப்பு**

- ★ 5-01 — சிந்தனைச் சிதறல்
- ★ 5-02 — எழுச்சிக்கீதம்
- ★ 5-10 — புதியவை
- ★ 5-15 — மழலைகளுக்காக
- ★ 5-30— இசையும் கதையும் க.சிவா எழுதிய ''எங்கள் துயர்தீர''
- ★ 6-00 — சிந்தனைக்குச் சிலவினாடிகள்
- ★ 6-02— பொன்விளையும் பூமி ''கால்நடைக் கட்டுப்பாடு'' தயாரிப்பு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்
- ★ 6-15 — விளையாட்டுச் செய்திகள் தொடர்ந்து கேள்வி பதில்கள்

## அடுத்த திங்களன்று மீட்புநிதி கடன் மீளளிப்பு

யாழ்ப்பாணம்,ஜன. 12

தமிழீழ மீட்பு நிதிக்கடன் மீளளிப்புக்குத் தெரிவு செய்யப்பட்ட கடன் பத்திரதாரருக்கு எதிர்வரும் 16 ஆம் திகதி திங்கட்கிழமை மீட்பு நிதிக்கடன் மீளளிப்புச் செய்யப்படவுள்ளது.

நல்லூர், யாழ்ப்பாணம், கோப்பாய், உடுவில், மானிப்பாய், தெல்லிப்பளை, சங்கானை, காரைநகர், வேலணை ஆகிய பிரிவுகளைச் சேர்ந்தோருக்கு நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் காலை 8-30 மணிக்கும்—

பருத்தித்துறை, கரவெட்டி, வடமராட்சி கிழக்கு ஆகிய பிரிவுகளைச் சேர்ந்தோருக்கு வடஇந்து மகளிர் கல்லூரியில் முற்பகல் 11-30 மணிக்கும்—

சாவகச்சேரி, பச்சிலைப்பள்ளி ஆகிய பிரிவுகளைச் சேர்ந்தோருக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் பிற்பகல் 2-30 மணிக்கும் மீட்பு நிதிக் கடன் மீளளிப்புச் செய்யப்படும் என தமிழீழ நிதிப் பொறுப்பாளர் திரு. செ. தமிழேந்தி அறிவித்துள்ளார். (ஐ)

## 8 ரஷ்ய நாட்டு யுத்த விமானங்களை இந்தியா மிக விரைவில் வாங்கும்

மொஸ்கோ, ஜன. 12

எட்டு ரஷ்ய ஜெட் விமானங்களையும் இரண்டு பயிற்சி விமானங்களையும் கொள்வனவு செய்வதற்கு இந்தியா தீர்மானித்துள்ளது. இவற்றின் பெறுமதி 22 கோடி டொலர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

மிக் விமானங்கள் உட்பட 180 கோடி டொலர் பெறுமதியான விமானங்களை கொள்வனவு செய்வது பற்றி இந்தியாவும் ரஷ்யாவும் 6 மாதங்களாக பேச்சுக்களை நடத்தி வந்தன.

ஆனால் தொழில் நுட்பத்தை மாற்றுவதற்கு மொஸ்கோ விருப்பம் தெரிவிக்காததால் இந்திய அரசாங்கம் இந்தக் கட்டளை குறித்து மறு பரிசீலனை செய்ய வேண்டி இருந்தது.

8 யுத்த விமானங்களும் மூன்று மாத காலத்திற்குள் விநியோகிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ)

## இரு அமைச்சுக்களின் கீழ் தொழில் நுட்பக் கல்லூரிகள்

யாழ்ப்பாணம். ஜன. 12

யாழ். தொழில் நுட்பக் கல்லூரி விரைவில் இரண்டு அமைச்சுக்களின் கீழ் கொண்டு வரப்படவுள்ளது

அதன்படி—

ஜி. சி. ஈ. உயர்தரப் பரீட்சையை அடிப்படையாகக் கொண்ட பயிற்சி நெறிகளுக்கான தேர்வுகள் கல்வி உயர் கல்வி அமைச்சின் கீழும்--

ஜி. சி. ஈ. சாதாரண தரத்தை அடிப்படையாகக் கொண்ட பயிற்சி நெறிகளும், அதற்கு கீழான பயிற்சிகளும் தொழில் அமைச்சின் கட்டுப்பாட்டிலும் நடைபெறும்.

இவ்வாறு நாட்டில் ஆறு தொழில் நுட்பக்கல்லூரிகள் கல்வி, உயர்கல்வி அமைச்சின் கீழும், தொழில் அமைச்சின் கீழும் கொண்டுவரப்பட்டுள்ளன.

அம்பாறை தொழில் நுட்பக் கல்லூரி முற்றாக உயர் கல்வி அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்களின் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்வதற்காக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட குழு, இது சம்பந்தமான முடிவை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

### 2 ஆயிரம் இளைஞர், யுவதிகள்
## சிவனொளிபாதமலையில் சமாதானப் பிரார்த்தனை

கொழும்பு, ஜன 12

சமாதானம் வேண்டி சுமார் 2ஆயிரம் இளைஞர்களும், யுவதிகளும் சிவனொளிபாத மலையில் பிரார்த்தனை நடத்தியுள்ளனர்.

இந்தப்பிரார்த்தனையில் சிங்கள, தமிழ், முஸ்லிம்,பறங்கிய சமூகங்களைச் சேர்ந்தவர்கள் பங்கு பற்றினர்.

''நாட்டில் யுத்தம் வேண்டாம்'' ''இனபேதம் வேண்டாம்'' என்ற சுலோகங்கள் அடங்கிய பதாகைகளை அவர்கள் தாங்கியிருந்தனர். (ஒ-3-6)

## வர்ணச்சீருடை காவலர்கள் அலரி மாளிகையில் கடமை!

கொழும்பு, ஜன. 12

கொழும்பு கோட்டையில் உள்ள ஜனாதிபதி மாளிகையில் வர்ணச்சீருடை அணிந்து காவல் கடமையில் இருந்த படையினர் —

தற்போது கொள்ளுப்பிட்டியில் உள்ள அலரி மாளிகையில் காணப்படுகின்றனர்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரணதுங்க அலரி மாளிகையிலேயே தமது கடமைகளைச் செய்து வருகிறார்.

கோட்டையில் உள்ள ஜனாதிபதி மாளிகையில் தாம் வசிக்கப் போவதில்லை என்று சந்திரிகா ஜனாதிபதியானவுடன் அறிவித்திருந்தது தெரிந்ததே. (ஒ)

## படையினரின் சோதனைகள் தொடர்வதாக அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 12

வடக்கு-கிழக்கின் பல பகுதிகளிலும் உள்ள சோதனைச் சாவடிகளில் ஸ்ரீலங்கா படையினரின் வழமையான சோதனைகள் தொடர்ந்தும் இடம் பெறுகின்றன என்றும்—

போர் இடைநிறுத்தத்தின் பின்னர் எதுவித மாற்றங்களும் இன்றி சோதனை நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன என்றும் 'புலிகளின் குரல்' அறிவித்தது.

தாண்டிக்குளம் வழியாகக் கொழும்பு செல்லும் வடபகுதி பயணிகள் மீதான சோதனை நடவடிக்கைகளிலும் எதுவித மாற்றமும் இல்லை என்றும் -

அதேபோல திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டத்திலும் சோதனை நடவடிக்கைகள் தொடர்வதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-3)

## விசாரணைக் குழுக்களிடம் 300 மனுக்கள் சமர்ப்பிப்பு

கொழும்பு, ஜன. 12

அரசியல் கொலைகள் மற்றும் ஆட்கள் காணாமற் போனமை தொடர்பாக விசாரணை செய்யவென நியமிக்கப்பட்ட மூன்று ஆணைக்குழுக்களிடமும் இத்தகைய சம்பவங்கள் தொடர்பான 300 மனுக்கள் விசாரணைக்கென சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

இன்னும் நான்கு மாத காலத்தினுள் அறிக்கைகளை சமர்ப்பிக்கும்படி அந்த மூன்று ஆணைக்குழுக்களும் கேட்கப்பட்டிருப்பதாக நீதி, அரசியல் விவகார, வெளிநாட்டு வர்த்தக அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் தெரிவித்தார்.

இந்த விசாரணைகளின் மூலம் இறந்தவர்களின் எண்ணிக்கையை சரிவர உறுதிப்படுத்தி அவர்களது குடும்பங்களுக்கு தகுந்த நஷ்டஈடு வழங்கவும் —

அவர்களின் இறுதிச் சடங்குகளை அவரவர் மத வழக்கத்துக்கு [illegible] முடியும் என்றும் அவர் தெரிவித்தார். [illegible]

# சமாதான முயற்சிகளின் வெற்றியை நிர்ணயிக்கும் பாதை விவகாரம்

> ''சமாதானம் இன்று இல்லாவிட்டால் இனி எப்போதுமே இல்லை'' என்ற தலைப்பில் 'சண்டே ரைம்ஸ்' ஆங்கில வார இதழில் அதன் பாதுகாப்புச்செய்தியாளர் எழுதிய கட்டுரையின் தொகுப்பு இது.

போர் இடைநிறுத்தம் அமுலுக்கு வந்து ஸ்ரீலங்காப் படையினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான யுத்தம் முடிவுக்கு வருவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன.

எனினும் அரசாங்கம் எதிர்பார்த்த சில விடயங்களில் இன்னும் முடிவுகள் எட்டப்படவில்லை.

ஜனாதிபதி சந்திரிகாவும் அவரது அரச தரப்பு அதிகாரிகளும் பேச்சுக்கள் தொடர்ந்து நடை பெறவேண்டும் என்பதில் ஆர்வமாக இருந்து வருகின்றனர்.

### பாதையே முக்கிய பிரச்சினை

இரு தரப்பினரும் எதிர்நோக்கும் பிரச்சினைகளில் முக்கியமானது யாழ் குடாநாட்டுக்கான போக்குவரத்துப் பாதை ஆகும்.

பரிசுத்த பாப்பரசரின் வருகைக்காக வடபகுதி மக்கள் கொழும்புக்கு வருவதற்கு ஒரு பாதையை மட்டும் திறப்பது தற்போதைய முயற்சிகளின் நோக்கம் அல்ல.

யாழ் குடாநாட்டின் 6லட்சம் மக்களின் வாழ்க்கையை சகஜ நிலைக்குக் கொண்டு வருவதற்குத் தேவையான கட்டடப் பொருள்களையும் மற்றும் பொருள்களையும் ஆயிரக்கணக்கான கனரக வாகனங்களில் யாழ்ப்பாணத் [illegible] பாதை ஒன்றைத் திறப்பதே [illegible] பிரச்சினை [illegible]

1991இல் பூநகரிப் பகுதி ஸ்ரீலங்கா படையினரின் கட்டுப்பாட்டின் கீழ் வந்த பின்னர் குடாநாட்டுக்கான கடைசி பாதையும் தடைசெய்யப்பட்டது. அந்த நிலைமையில் இன்று வரை மாற்றம் ஏற்படவில்லை.

### 4 ஆவது கட்டப் பேச்சு

பாப்பரசரின் கொழும்பு வருகையின் பின்னர் விடுதலைப் புலிகளுக்கும் அரச தரப்பினருக்கும் இடையிலான நான்காவது கட்டப் பேச்சு ஆரம்பமாகும்.

அப்போது இந்த போக்குவரத்துப் பாதை சம்பந்தமாக எடுக்கப்படும் முடிவிலேயே முழு சமாதான முயற்சிகளும் தங்கி உள்ளன.

எதிர்வரும் 14 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள மூன்றாவது கட்டப் பேச்சுக்கள் ஒரே நாளில் முடிவடைந்து விடும்.

கடந்த முதலாம் திகதி தொடக்கம் அமுலுக்கு வந்துள்ள போர் இடைநிறுத்தம் பற்றிய விடயங்களே அந்தப் பேச்சில் முக்கியமாக ஆராயப்படவுள்ளன.

யுத்தத்தினால் சீரழிந்து போயுள்ள வடக்கு— கிழக்கு மாகாணத்தை புனரமைப்பதற்காக 4,000 கோடி ரூபாவை வழங்க அரசு இணங்கி உள்ளது,

ஆனால் ஆனையிறவுப் பாதையை போக்குவரத்துக்குத் திறக்காமல் இந்த திட்டத்தை செயற்படுத்த முடியாது என்று 2 ஆவது கட்டப் பேச்சில் அரசாங்க தரப்பினர் உறுதியாகத் தெரிவித்துவிட்டனர்.

அரசாங்கத்தின் யோசனையை விடுதலைப் புலிகள் தரப்பினர் ஏற்க மறுத்துவிட்டனர்.

பூநகரி ராணுவ முகாம் முற்றாக அகற்றப்பட வேண்டும் என்றும் பூநகரிப் பாதை திறக்கப்பட வேண்டும் என்றும் விடுதலைப் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இந்த விடயத்தில் அரச தரப்புவிட்டுக் கொடுக்காது போனால் பேச்சுக்கள் தொடரும் வாய்ப்பு இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதனை அடுத்து பூநகரி இராணுவத்தை தற்போதைய நிலையில் இருந்து சிறிது தூரம் நகர்த்துவதற்கு அரச தரப்பில் யோசனை தெரிவிக்கப்பட்டது.

கேந்திர பகுதியாகக் கருதப்படும் பூநகரியைப் பாதுகாப்பதற்காக நூற்றுக்கணக்கான ஸ்ரீலங்காப் படை வீரர்கள் உயிர்த்தியாகம் செய்துள்ளதை கருத்தில் கொண்டு, பூநகரியில் இருந்து படைகளை முற்றாக வாபஸ் பெறும் விடுதலைப் புலிகளின் கோரிக்கையை தற்போதைக்கு ஏற்க அரசு மறுத்து வருகிறது.

எனினும் பூநகரிப் பாதை தொடர்பாக அரசாங்கத்தின் இறுதி நிலைப்பாடு இது அல்ல என்று அரசாங்கம் சுட்டிக் காட்டி உள்ளது.

சமாதான முயற்சிகளில் ஏற்படும் முன்னேற்றத்தை அடுத்து பூநகரியில் இருந்து முழு அளவில் படைகளை வாபஸ் பெற அரசாங்கம் இணங்கலாம்.

அரசாங்கத்தின் முயற்சிகளில் வட பகுதி மக்களின் மனங்களை வெல்ல வேண்டும் என்பதும் பிரதானமாக இருந்து வருகிறது. பொருளாதாரத்தடை ஓரளவுக்குத் தளர்த்தப்பட்டதும் பெருந்தொகையான நிதியை புனர்நிர்மாண வேலைகளுக்காக ஒதுக்க ஜனாதிபதி சந்திரிகா இணங்கியதும் இதனை மனதில் கொண்டே—

பேச்சுக்கள் சுமுகமாக நடைபெறவேண்டும் என்பதற்காக அரசாங்கம் இது வரை வளைந்து கொடுத்து வந்தது.

ஆனால் 4ஆவது கட்டப் பேச்சில், ஆனையிறவுப் பாதை திறக்கப்பட வேண்டும் என்ற தனது கோரிக்கையில் அரசாங்கம் உறுதியாக இருக்கும் என்று தெரிகிறது.

சனிக்கிழமை நடைபெற உள்ள மூன்றாவது கட்டப் பேச்சுக்களில் போர் இடை நிறுத்தத்தை அமுல் செய்வதற்கான வழிமுறைகள் பற்றியே பிரதானமாக ஆராயப்படும். போர் இடை நிறுத்தத்தை எப்படி அவதானிப்பது என்பது குறித்தும் ஆராயப்படும்.

### நடமாட்ட தடைப்பிரதேசம்

போர் இடைநிறுத்த ஒப்பந்தத்தில், விடுதலைப் புலிகளுக்கும் ஸ்ரீலங்காப் படையினருக்கும் இடையிலான நடமாட்டத் தடைப் பிரதேசம் ஒன்றுக்கு இணக்கம் காணப்பட்டுள்ளது.

பங்கர்களை அமைப்பது, முள்ளுக்கம்பிகளை இடுவது போன்ற எந்த ஒரு ராணுவ நடவடிக்கையையும் இப் பிரதேசத்தில் செய்ய முடியாது.

ஒவ்வொரு முகாமில் இருந்தும் இரண்டு மைல் சுற்றாடலில் இத்தகைய தடைப் பிரதேசம் அமைக்கப்பட வேண்டும் என்று ராணுவம் விரும்பியது.

ஆனால் விடுதலைப் புலிகள் இதற்குச் சம்மதிக்கவில்லை.

இதனால் இதன் விஸ்தீரணம் 600 மீற்றராகக் குறைக்கப்பட்டது.

புலிகளின் துப்பாக்கிச் சூட்டு தூரத்துக்குள் இது இருப்பது குறித்து ராணுவத்தினர் ஏற்கனவே ஜனாதிபதியிடம் தமது அதிருப்தியை தெரிவித்துள்ளனர்.

1990 இல் இடம்பெற்றது போன்று விடுதலைப் புலிகளின் எந்த ஒரு திடீர் பாய்ச்சலும் படையினருக்கு பேரழிவை ஏற்படுத்தலாம் என்று ராணுவம் தரப்பில் அச்சம் தெரிவிக்கப்படுகிறது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## சண்முகலிங்கம் புஸ்பநாதன்

[பிரபல வர்த்தகர் கொழும்பு]

புங்குடுதீவு 12 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிட மாகவும், சேச் லேன், கொக்குவில் மேற்கை வசிப்பிட மாக கொண்டவருமான சண்முகலிங்கம் புஸ்பநாதன் 8 - 1 - 95 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகலிங் கம் – பராசக்தி தம்பதிகளின் அன்பு மகனும், தவதேவி யின் அன்புக் கணவரும், மயூரன், பிரதீபன் (யாழ். இந் துக் கல்லூரி மாணவர்கள்), சுமிதா (யாழ் இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை (இளைப்பாறிய ஆசிரியர்) — நாகம்மாவின் அன்பு மகனும், சகுந்தலா, சதாசிவம் (ஆசிரியர் புங். / ஸ்ரீகணேச மகா வித்தியால யம்), நிர்மலா, தேவராஜா (சுவிஸ்) ஆகியோரின் அன் புச் சகோதரரும், சச்சிதானந்தன், திருமதி வ. பங்கயற் செல்வி (ஆசிரியை புங் / ஸ்ரீகணேச மகா வித்தியால யம்), தனசிங்கநாதன் (மேனன் ரேடிங் கொம்பனி கொழும்பு), விக்னேஸ்வரராஜா (ஆசிரியர்), கோகிலா தேவி, சண்முகானந்தராசா(U.K.), நடராஜா(U.K.), சிவானந்தராஜா (கனடா), கலாதேவி (U.K.) ஆகி யோரின் அன்பு மைத்துனரும், கலாநிதி கா. குகபாலன் (சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்), விஜயா (U.K.), தேன்மொழி (கனடா) ஆகியோரின் சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று வியாழக் கிழமை 12 - 1 - 95 முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக் காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல் லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண் பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளுகின் றோம்.

தகவல்:
ச. சதாசிவம்
(சகோதரன்)

சேச் லேன்,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (34672)

## சின்னையா செல்லத்துரை

[உரிமையாளர் S. S. செல்லத்துரை ஸ்தாபனம் பெருமாள் கோவிலடி]

புங்குடுதீவு 10 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமா கவும், யாழ். பெருமாள் கோவிலடியை வசிப்பிட மாகக் கொண்டவரும், யாழ். உத்தரவு பெற்ற வர்த்தக சங்க முன்னாள் தலைவரும், யாழ். அரசடி விநாயகர் ஆலய முன்னாள் தர்மகர்த்தாவுமான சின் னையா செல்லத்துரை அவர்கள் 10-1-95இல் காலமா னார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா முத்துப்பிள் ளையின் அன்பு மகனும், காலஞ்சென்ற கந்தையா— வள்ளியம்மையின் அருமை மருமகனும், சிவக்கொழுந் துவின் அன்புக் கணவரும், சிதம்பரநாதன் (Financial Controller Stassen Exports Ltd. Colombo), செல்வராணி, கமலராணி (பிரதான முகாமையாளர், இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்), சண்முகநாதன் (Germany), திருச்செல்வநாதன் (U K), அனந்தராணி (Canada), சிவநேசநாதன் (U K), ஜீவராணி( UK), மதிவதனராணி, தாமரைச்செல்வி (Swiss) ஆகியோ ரின் பாசமுள்ள தந்தையாரும், —

பங்கையற்செல்வி, செய்மோகனரெத்தினம் (Retd. Chief Draughtsman -C.T.O.), துரைராஜா (S. Saverimuthu & Co.Chartered Accountants), குகனேஸ்வரி (Germany), சியாமளா (U K), அருளானந்தம் (Canada), அம்பிகா (U K), கணேசதாஸ்காந்தி (U K), தர்மபாலன் (அதிபர், புங்குடுதீவு மகா வித்தியால யம்), திலகலிங்கம் (Swiss) ஆகியோரின் அன்பு மாம னாரும், சகாநந், கோபிநந், சந்திரமோகன், நிராஜ், நிருஷா, பிரவீனா, பிரதீப், அபிராமி, ஆனந், வஜீ ரன், பிராயகா, ஞானவிநோதன், ஜனகன்சித்திர வேல், பவித்திரன், பவித்ரா, பிரியங்கி ஆகியோரின் பாசமுள்ள பேரனும் —

காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு, வல்லி புரம், கனகசபை, கந்தையா ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற பராசக்தி மற்றும் காந்தி மதி, அருளம்மா, N K. மயில்வாகனம் (பிரபல வர்த் தகர், கொழும்பு), காலஞ்சென்ற தர்மலிங்கம் ஆகி யோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (12-1-95) பிற்பகல் 2 மணியளவில் நடைபெறும்

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
செ. சண்முகநாதன்
(மகன்)

53, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம். (34673)

## கனகசபை பரராசசிங்கம்

நயினாதிவு

(முன்னாள் உரிமையாளர் கொழும்பு ரேடேர்ஸ், 23, சென்ஜோன்ஸ் வீதி, கொழும்பு - 11)

நயினாதீவு 5 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த கன கசபை பரராசசிங்கம் நயினாதீவில் காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான கனகசபை - கற்ப கம் அவர்களின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்க ளான கார்த்திகேசு - இளையபிள்ளை அவர்களின் அன்பு மருமகனும், நவசக்திதேவியின் அன்புக் கண வரும், சித்திராதேவி, சசிகரன், தவநிதி, ரேணுகா, பிரகாஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ் சென்றவர்களான கணபதிப்பிள்ளை, முருகேசபிள்ளை (முருகன்ரேடேர்ஸ் உரிமையாளர் கொழும்பு), மற்றும் நாகரெத்தினம், காலஞ்சென்ற சுப்பிரமணியம், மற் றும் கதிரவேலுப்பிள்ளை (மாவட்ட நீதிபதி — ஊர் காவற்றுறை), சரஸ்வதி (அதிபர் - யா/இந்து மகளிர் கல்லூரி), சகாதேவன் (விரிவுரையாளர் -யா/தொழில் நுட்பக் கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரரும், சகுந்தரம், பரமேஸ்வரி, காலஞ்சென்ற தில்லையம் பலம், மற்றும் கனகாம்பிகை, சுந்தரேஸ்வரி (ஆசி ரியை மங்கையர்க்கரசி வித்தியாலயம், நல்லூர்),ஜெய ராசா (வரி உத்தியோகத்தர் - உள்நாட்டிறைவரித் திணைக்களம், யாழ்ப்பாணம்). சாரதாதேவி (ஆசி ரியை - பெரியபுலம் மத்தியமகா வித்தியாலயம்), சுவாமிநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நயினாதீவில் நடை பெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர் கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. கதிரவேலுப்பிள்ளை
(மாவட்ட நீதிபதி, சகோதரர்)

12, நல்லூர் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம். (34670)

# பாப்பரசரின் இலங்கை விஜயம் பாதுகாப்பில் பெரும் நெருக்கடி

லண்டன், ஜன. 12

பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் எதிர் வருப் 20 ஆம் திகதி மேற் கொள்ளும் இரண்டு நாள் இலங்கை விஜயம் பெரும் பாதுகாப்பு நெருக்கடிகளை ஏற்படுத்தியிருப்பதாக பி. பி. ஸி. குறிப்பிட்டிருக்கிறது.

பாப்பரசருக்கு எதிராக பௌத்த தீவிரவாதப் போக் குடையவர்கள் தொடர்ந்து நடத்தி வரும் பிரசாரம், பாப் பரசரின் விஜயதினம் நெருங்க, நெருங்க பெரும் நெருக்கடி களையும், பதற்றத்தையும் தோற்றுவித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையில் பௌத்த — கிறிஸ்தவ மக்களிடையே முறுகல் நிலை தோன்றியிருப் பதாகவும் —

இது பாப்பரசர் விஜய வேளையில் முற்றி மோதல் கள், கலவரங்கள் வெடிக்க வழிசெய்யலாம் எனவும் அஞ் சப்படுகின்றது.

அதேசமயம் —

பல கோடி கத்தோலிக்க மக்களின் புனித மதத்தலை வரான பரிசுத்த பாப்பரச ருக்கு உரிய பாதுகாப்பு வழங் குவதும் —

இலங்கையில் அவரின் கௌரவத்துக்கு பங்கம் ஏற் படாத வகையில் அவரை வரவேற்று, அவரின் நிகழ்ச் சிகளை நிறைவுபெற உதவு வதும் —

ஸ்ரீலங்கா பாதுகாப்பு வட் டாரங்களுக்கு பெரும் தலை யிடியைக் கொடுத்திருப்பதா கக் கூறப்படுகின்றது.

1981 ஆம் ஆண்டு ரோமில் துருக்கிய இளைஞன் ஒருவ னின் துப்பாக்கிச் சூட்டு கொலை முயற்சிக்கு இலக்கா னது முதல், பாப்பரசரின் வெளிநாட்டு விஜயங்கள் தொடர்பான பாதுகாப்பு ஏற்பாடுகளில் அதிக கவனம் எடுக்கப்பட்டு வருவது குறிப் பிடத்தக்கது. [உ-3]

## பௌத்தத்தை மதிப்பதாக பாப்பரசர் அறிவிப்பு

ரோம், ஜன. 12

பௌத்த மதத்தின் மீது தமது மரியாதையையும் கௌரவத்தையும் தாம் சொரிவதாக பாப்பரசர் அரு ளப்பர் சின்னப்பர் நேற்று வத் திக்கானில் தெரிவித்தார்.

பிலிப்பீன்ஸ், ஆஸ்திரே லியா, பாப்புவா, நியூகினியா, ஸ்ரீ ங்கா உட்பட பல நாடு களுக்கான தமது சுற்றுப் பய ணத்தை நேற்று ஆரம்பிப்ப தற்கு சில மணி நேரங்களுக்கு முன்னர்—

வத்திக்கானில் தம்மை தரி சிக்க வந்த மக்கள் மத்தியில் உரையாற்றுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

தாம் எழுதிய புத்தகம் ஒன் றில் பௌத்த மதம் குறித்து தெரிவித்த கருத்துகளுக்காக பாப்பரசர் தாமே மன்னிப்புக் கோரவேண்டும் என்றும்—

இல்லையேல் அவரின் இலங்கை விஜய நிகழ்ச்சி களைப் புறக்கணிக்கப் போவ தாகவும்—

பௌத்த மதத் தலைவர் கள் மிரட்டி வருவது தெரிந் ததே.

ஆனால் இலங்கை உட்பட பல நாடுகளுக்கான விஜ யத்தை நேற்று ஆரம்பித்த பாப்பரசர் நேற்று வரை தமது புத்தகத்தில் தெரிவிக் கப்பட்ட கருத்துக்களுக்காக மன்னிப்புக் கோரவில்லை என் பதும்—

வத்திக்கானில் வெளிவிவ கார அமைச்சரான கர்த்தி னால் ஒருவர் அக்கருத்துக் காக வருத்தம் தெரிவித்து அறிக்கை வெளியிட்டதும்— தெரிந்தவையே. (உ-3)

## தேவாலயம், விகாரை மாறி மாறி தாக்கப்பட்டன?

### சீதுவையில் பதற்றநிலை

கொழும்பு, ஜன. 12

சீதுவைப் பகுதியில் உள்ள கத்தோலிக்க தேவாலயம் ஒன்று நேற்று முன்தினம் எரிக்கப்பட்டதை அடுத்து, இதே பகுதியில் நேற்று பௌத்த விகாரை ஒன்றிலி ருந்த புத்தர் சிலை இனந் தெரியாத கும்பலினால் தாக் கப்பட்டுள்ளதாக ''வெரித் தாஸ்'' வானொலி சேவை யில் அறிவிக்கப்பட்டது.

மற்றும் பல செய்தி நிறுவ னங்களும் இதே தகவலை வெளியிட்டன.

ஆனால் சீதுவைப் பகுதியில் நேற்று முன்தினம் தேவால யம் ஒன்றிலும், நேற்று பௌத்த விகாரை ஒன்றிலும் தீ விபத்து ஏற்பட்டதாக வெரித்தாஸ் சிங்கள வானொலி சேவையில் அறி விக்கப்பட்டது.

பாப்பரசர் பௌத்த மதம் குறித்து வெளியிட்ட கருத் தும் — பாப்பரசரின் இலங்கை விஜ யத்துக்கு எதிராக முடுக்கி விடப்பட்டுள்ள பௌத்த தீவி ரவாத பிரசாரமும் —

இந்த தீப்பிடித்த சம்பவங் களுக்கு காரணமாக இருக்க லாம் என சீதுவை மக்கள் கருதுவதாகத் தெரிவிக்கப் பட்டது. அங்கு பதற்றம் நில வுகின்றது.

ஆனால் தீப்பிடித்த சம்ப வங்களுக்கும் பாப்பரசரின் விஜயத்துக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என கொழும்பு மேலதிக மேற்றி ராணியார் அதி வண. மல்கம் ரஞ்சித் தெரிவித்துள்ளார்.

நத்தார் அலங்காரங்களுக் கான மின்னொளி ஏற்பாட் டில் உண்டான தவறினா லேயே கத்தோலிக்க தேவா லயத்தில் தீ விபத்து ஏற்பட் டதாக அத்தேவாலய பங்குத் தந்தை தெரிவித்துள்ளதாக வும் அவர் சொன்னார். (உ-க-3-6)

## காலிதா ஸியா இலங்கை வருவார்

பங்களாதேஷ் பிரதமர் பேகம் காலிதா ஸியா இம் மாதம் 25, 26 ஆம் திகதி களில் இலங்கைக்கு விஜயம் செய்யவிருக்கிறார்.

''சார்க் அமைப்பின் தலைவி என்ற முறையில் சார்க் விவ காரங்கள் தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமார துங்கவுடன் பேசவே அவர் இங்கு வருவதாகத் தெரிவிக் கப்பட்டது. [உ 3]

## வாழப்பாடிக்கு....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

மீண்டும் சேர்ந்தவர்.

தமிழக காங்கிரஸில் இது வரை வாழப்பாடி அணி, மூப்பனார் அணி என இரு பிரிவுகள் இருந்த போதிலும் இரு அணியிலும் சேராமல் நடுநிலைமை வகித்தவர் குமரி அனந்தன்.

தமிழக முதல்வர் ஜெய லலிதாவுக்கு எதிராக அண் மைக் காலத்தில் கடும்போக் கைக் கடைப்பிடித்து வந்த வாழப்பாடி —

ஜெயலலிதாவின் ஏற்பாட் டில் கடந்த வாரம் நடை பெற்ற அனைத்துலக தமி ழாராய்ச்சி மாநாட்டின் நிறைவு நாள் நிகழ்ச்சியில் தமது கட்சித் தலைவர் நரசிம்மராவ் பங்குபற்றியதை பகிரங்கமாக கண்டித்து விமர்சித்தவர்.

அவரின் இடத்துக்கு நிய மிக்கப்பட்டிருக்கும் குமரி அனந்தன், ஜெயலலிதாவு டன் இணங்கிப் போகின்ற வர் எனக் கூறப்படுவதால்—

புதிய நியமனம் மீண்டும் தமிழகத்தில் காங்கிரஸ் — அ. தி. மு. க கூட்டணி ஏற் பட வழிசமைக்கக் கூடும் என எதிர் பார்க்கப்படுகின் றது. (உ-க-3)

## வடக்கு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெருந்தெருக்கள், விவசா யம், மீன்பிடி, வீடமைப்பு, வேறு பொருளாதார அபிவி ருத்தி நடவடிக்கைகள் ஆகி யவை சார்ந்த துறைகளுக்கே இந்நாடுகள் உதவி வழங்க இருக்கின்றன.

இத்திட்டங்களுக்கான நிதி உதவி இவ்வருட நடுப்பகுதி யிலிருந்து வழங்கப்படும் என அதிகாரிகள் நம்புகின்றனர்.

''அரசுக்கும் — விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான உறவுநிலை பற்றியே உதவும் நாடுகள் முக்கியமாகக் கவ னிக்கின்றன. சரியான தீர் வுத்திட்டம் வராவிட்டால் — அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் புரிந்துணர்வு ஏற் படாவிட்டால்— இந்த விட யத்தில் தமது கடப்பாட்டை நிறைவேற்ற வேண்டிய தேவை உதவும் நாடுகளுக்கு இல்லாமல் போய்விடும்''— இப்படி அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர். (உ)

## அரசு அவசர நடவடிக்கை:

## குண்டு துளைக்க முடியாத கார்கள் இறக்குமதி

கொழும்பு, ஜன. 12

போர் இடைநிறுத்த இணக் கம் ஒருபுறமிருக்க —

மறுபுறத்தில் குண்டு துளைக்கமுடியாத பல கார் களை இறக்குமதி செய்யும் தனது திட்டத்தில் அரசு முழு மூச்சுடன் செயற்படவிருப்ப தாக கொழும்புப் பத்திரிகை ஒன்று தெரிவித்தது.

அதி உயர் இலக்குகள் எனக் கருதப்படும் முக்கிய இரு அரசியல்வாதிகளின் பாவனைக்காக ஆகக் குறைந் தது இத்தகைய இரு கார்கள் அவசரமாகத் தேவைப்படுவ தாகத் தெரிவிக்கப்பட்டது. (உ)

## ராணுவம்...!

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளுக்கு விநியோகிக்கப்பட்டிருக் கிறது.

பதவி உயர்வு மற்றும் விட யங்களுக்காகத் தயாரிக்கப்ப டும் —ஒவ்வொரு அதிகாரிகள் பற்றிய — மதிப்பீட்டு அறிக் கைக்கு (வருடாந்த இரகசிய அறிக்கைக்கு) மாறான நோக் கத்துடன் மேற்படி அறிக்கை தயாரிக்கப்பட்டிருந்தது.

இந்த அறிக்கையில் ஒரு சில ரின் திறமை பற்றியே புகழப் பட்டிருந்தது.

இந்த அறிக்கையின் படி அரசு செயற்படுவதானால் —

இராணுவத்தின் உயர் பீடத்தை — கடைசி கேணல் வரை — அப்படியே அரசு விலக்க வேண்டியிருக்கும் என பாதுகாப்பு அமைச்சு அதிகாரி ஒருவர் சொன்னார்.

இந்த அறிக்கையைத் தயா ரித்தவர் யார் என்பது குறித்து இராணுவ வட்டா ரங்களில் பல சந்தேகங்கள் நிலவுகின்றன.

இத்தகைய அறிக்கையைத் தயாரித்து அனுப்பியமைக்கு யார் பொறுப்பு என்பதைக், கண்டுபிடிக்க இரகசியப் புல னாய்வுப் பிரிவினர் அழைக் கப்படவிருப்பதாக உள்வீட்டு வட்டாரங்கள் தெரிவித்தன.

''இத்தகைய நடவடிக்கை ஒருவகையில் பயங்கரவாதச் செயலே'' என வர்ணித்துள்ள சில சிரேஷ்ட அதிகாரிகள் இது குறித்து கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அரசை வற்புறுத்தி வருகிறார்கள்'

ஆங்கில வார இதழ் ஒன்று இச் செய்தியை வெளியிட் டது. (உ)

## ராஜீவ்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்புக்கும் புதுடில்லிக் கும் இடையில் நெருங்கிய தொடர்பும் புரிந்துணர்வும் நிலவுவது புலிகளை மகிழ்ச்சி யற்ற நிலைக்குத் தள்ளியிருக் கிறது.

— இவ்வாறு ''சண்டே லீடர்'' தெரிவித்தது.

இதேசமயம் —

ராஜீவ் கொலைவிசாரணை தொடர்பாக நான்கு ஈழத் தமிழர்களை ஸ்ரீலங்கா இந் தியாவிடம் கையளித்துள் ளது என்ற செய்தியை ஸ்ரீ லங்கா வெளியுறவு அமைச்சு மறுத்துள்ளது. அது பற்றிய விவரம் மூன்றாம் பக்கத்தில் பிரசுரமாகியுள்ளது. (உ)

## சரியான...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

காகவே இந்த மாநாடு நடத் தப்பட்டது.

அரசியல் தீர்வு ஒன்றுக்கு விடுதலைப் புலிகள் இணங் கிய பின்னரே வடக்கின் அபி விருத்திக்கான நிதி வழங்கப் படும். இது குறித்து விடுத லைப் புலிகளுக்குத் தெரிவிக் கப்படும் — என்று அந்த மாநாட்டில் வைத்து பிரதி அமைச்சர் இராணுவ அதிகா ரிகளிடம் தெரிவித்தார். (உ)

# வவுனியா ராணுவ 'பாஸ்' கெடுபிடிகள் ஓரளவு தளர்வு

கொழும்பு, ஜன. 12

வவுனியா பிறவுண் கம்பனி யில் வடபகுதி பயணிகளுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கும் நடவடிக்கைகள் இலகுவாக் கப்பட்டிருப்பதாக தெரிவிக் கப்பட்டிருக்கிறது.

வடக்கில் இருந்து வரும் பயணிகள் அங்கு கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், யாழ்ப்பாணம் என வெவ் வேறு வரிசைகளில் நிறுத்தப் பட்டு துரிதமாக அவர்களுக்கு அனுமதிப்பத்திரங்கள் வழங் கப்படுவதாகத் தெரிவிக்கப் படுகிறது.

இதுவரை கொழும்பு, வவு னியா என இரு வரிசைகள் மட்டும் ஏற்படுத்தப்பட்டு அனுமதிப் பத்திரம் வழங்கப் பட்டு வந்தது குறிப்பிடத்தக் கது. (இ-ஐ)


## லயன் எயர்

# விமான சேவை

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு சென்று பாப்பரசரைத் தரிசிக்க யாழ். ஆயர் மூலம் பதிவு செய்தவர்கள் வவுனியாவில் இருந்து விமான மூலம் சென்று வர விரும்பினால் அவர்களுக்குரிய விமானக் கட்டணம்

வவுனியா — கொழும்பு — வவுனியா
3,000/-

ஒரு வழிப்பாதை - 1.650/-

மேலதிக விவரங்களுக்கு:

யாழ். ஆயர் பணிமனையுடன் 15-01-1995 இற்கு முன் தொடர்பு கொள்ளவும்.

[8195]

# புதிய பேரடெனியா இன்ஸிரியூட்

K.K.S. வீதி, கொக்குவில்

## கல்வியாண்டு 1995 புதிய வகுப்புகள்

ஆரம்பம்: 15-01-1995 ஞாயிறு காலை 9.30 மணி

ஆண்டு 3 முதல் O/L வரை வகுப்புகள்

| | |
|---|---|
| விஞ்ஞானம் | — திரு. இரா. அருட்செல்வம் |
| | — திரு. A.K. மூர்த்தி |
| | — திரு. ம. இராமநாதன் |
| | — ராஜா |
| கணிதம் | — திரு. சண். வாமதேவன் |
| | — திரு. சந்திரகுமார் |
| | — திரு. V N. பத்மநாதன் |
| தமிழ், சமயம் | — திரு. ஞான. திருக்கேதீஸ்வரன் |
| | — செல்வி நாகேஸ்வரி |
| ஆங்கிலம் | — திரு. S. சந்திரமௌலி |
| | — திரு. விஜயபாஸ்கரன் |
| சமூகக்கல்வி | — திரு. ஜ. புவனேந்திரன் |
| | — திரு. இரா. கணேஸ் |
| | — திரு. அ. குணசிங்கம் |
| சித்திரம் | — திரு. மு. இராதாகிருஷ்ணன் |
| வர்த்தகம் | — திரு. S. பரமசிவம் |
| | — திரு. மகேஸ் |
| விவசாயம் | — திரு. M. சிவலிங்கம் |
| ஆங்கில இலக்கியம் | — பிரபல ஆசிரியர் |

சகல வகுப்புகளுக்குமான சங்கீதம், நடனம் ஆகிய பாடங்கள் ஆரம்பமாகின்றன.

ஆண்டு 4, 5 புலமைப்பரிசில் வகுப்பு

| | |
|---|---|
| தமிழ், கணிதம் | — செல்வி மாலதி தர்மலிங்கம் |
| | — திரு. நயினை சோமேஸ்வர பிள்ளை |

SPOKEN ENGLISH
With Grammar
By Mr. RAMNATH

சகல வகுப்புகளுக்கும் அனுமதி ஏற்றுக் கொள்ளப் படுகின்றன.

(34671)


# மரண அறிவித்தல்

## திருமதி மார்க்கண்டு நாகம்மா.

[விபுலானந்த வீதி, மாதகல்]

காலம் சென்ற மார்க்கண்டுவின் அன்பு மனைவி நாகம்மா காலமானார். இவர் காலம் சென்ற சிறிபதி, மற்றும் பாலச்சந்திரன் (கனடா), சுகுமார் (கனடா), மனோகரன் (பண்டத்தரிப்பு, ப. நோ. கூ. சங்கம்), அமிதரரஞ்சினிதேவி, ஆகியோரின் அன்பு தாயாரும், ஞானாம்பிகை, தேவிகாராணி,நேசமலர், பரமேஸ்வரி, நாகராசா (பண்டத்தரிப்பு, ப. நோ. கூ. சங்கம்), ஆகியோரின் மாமியாரும், சுப்பிரமணியம் (இளைப் பாறிய பொலீஸ்), அன்னைலட்சுமி, இராசரத்தினம், சிவயோகம், காலம் சென்ற இராசம்மா, ஆகியோரின் சகோதரியாரும் ஆவர், அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று வியாழக்கிழமை. நண்பகல் 1.00 மணிக்கு 47- மெமோரியல் பாடசாலை ஒழுங்கை, மானிப்பாயில் நடைபெற்று பிப்பிலி மயானத்தில் பூதவுடல், தகனம் செய்யப்படும்.

இத் தகவலை உற்றர் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள் கிறேன்.

தகவல்
மா. மனோகரன்
(பண்டத்தரிப்பு, ப. நோ. கூ. சங்கம் இளை - 9)

[34669]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிற்டெட்டினரால் யாழ்ப்பாணம் [illegible] வீதி, [illegible] இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 12-01-1995 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org